REGD M 4642

திராவிடநாடு

விலை அணா 2   ஆண்டுசந்தா ரூ 7   இலங்கை 15 சதம்   மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 1—8—48 | இதழ் 7

பொறுத்திடோம்.

[மிதிலை, இராசையா]

—:●:—

தென்னாட்டில் இந்தியினை நுழைத்திடற்குத்
திட்டமிட்டார் சிறிதேனும் சிந்திக்காமல்

முன்னாளிற் கட்டாய இந்தி இங்கே
முறியடிக்கப் பட்டுமிந்த முயற்சி ஏனோ!

கன்மனத்து வடவர்தமக் கடிமையான
காரணத்தாற் பதவிபெறும் கடுமோகத்தால்

புன்மொழியாம் இந்தியினை மீண்டு மிந்தப்
பொன்னிலத்திற் புகவிட்டாற் பொறுத்திடோமே.

வருமிந்தி தன்னை இவண் வாழவிட்டால்
மாத்தமிழர் அடிமைநிலை மாறாதென்றே

பெருநிலைக்கண் உள்ள பல தலைவரெல்லாம்
பேதமின்றி உரைத்தபின்னர்ப் பெருவெள்ளம் போல்

திரைகடல்போல் முழக்கமிட்டுத் தமிழர்சேனை
திரண்டதுகாண்; பகைமொழியைச் சிதறடிக்க

முரசதிரும் அறப்போரின் முனையை நோக்கி
முத்தமிழைக் காத்திடற்கு வாரீர் முன்னால்.

★ பண்டிதரின் பேருரை! ★

—●—

"எவ்வளவு கவனித்தார்கள் தெரியுமா!—பெண்கள்!!—" என்று கேட்டார், நகைச்சுவை அரசர், என்னை.

'கிந்தனார்' காலட்சேபம் முடிந்து வீட்டுக்கு வந்ததும், கேட்டார். "ஆமாம்—மிக நன்றாகக் கவனித்தார்கள், தாய்மார்கள்" என்று நான் சொன்னேன்—கிந்தனார் கதைப் போக்கும், கருத்தும், அதனை அவர் எடுத்துரைத்த விதமும், காலட்சேபத்தைக் கேட்டவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது உண்மை — எனவேதான், ஆமாம், மிக நன்றாக கவனித்தார்கள் என்று நான் சொன்னேன்.

"எதை?" என்று கேட்டார் நண்பர்.

நான் பதிலுரைக்கவில்லை-என்ன பதிலுரைப்பது!

"இதை!" — என்று கூறிக் கொண்டே, தாம் அணிந்திருந்த வைரமாலையைக் காட்டினார்.-சிரித்தோம் அனைவரும். கதையை அல்ல-இந்த வைரமாலையை, அத்தனை அம்மணிகளும், மிக மிக அக்கரையுடன் கூர்ந்து கவனித்தபடி இருந்தார்கள்-என்று விளக்கமாகக் கூறினார்—விழுந்து விழுந்து சிரித்தோம்.

ஆமாம் தம்பி!—என்று வேறுபலரும் ஆமோதித்தனர்!

* * *

சென்ற கிழமை சென்னை வந்து, மூன்று நாட்கள் தங்கி, முக்கியமான பல சொற்பொழிவுகளாற்றினார், பண்டித ஜவஹர்லால் நேரு. அந்தக் கூட்டங்களிலே, கலந்துகொண்டவர்கள், வைரமாலையைக் கண்டார்களா, கதையின் போக்கைக் கவனித்துப்பலன் பெற்றார்களா என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும்போது, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற அந்தச் சம்பவம் என் கவனத்துக்கு வந்தது. நான் பத்திரிகைகளைப் பார்த்தேன்-கூட்டத்துக்குச் சென்று வந்தவர்களிலே பலரைக் கேட்டேன், பண்டிதரின் பேச்சிலே, விசேஷமானது, முக்கியமானது, மனதைக் கொள்ளை கொள்வது, மக்களின் எதிர்கால நலனுக்கு ஏற்றது, எது, என்று.

பலர், வைரமாலை காணும் போக்குடனேயே இருந்தனர் என்பது தெரிந்தது.

கூட்டத்தின் அளவு—குதூகலத்தின் அளவு — பலர் குறிப்பிட்ட விசேஷம்.

குழந்தையிடம் அவர் கொஞ்சியது, சிலசமயம் கோபித்தது-வேறு சிலர் குறிப்பிட்ட விசேஷம். லீகுக்குச் சாட்டை—நிஜாமுக்குச் சவுக்கடி — வேறுசிலர் குறிப்பிட்ட விசேஷம்.

ஆனால், பண்டிதரின் சென்னைச் சொற்பொழிவிலே, மிக விசேஷமான, மக்கள் கவனிக்கவேண்டிய, அரசியல் ஏடுகளில இடம்பெறக் கூடிய விசேஷம் ஒன்று இருந்தது—அதை அனேகர் கவனித்ததாகத் தெரியவில்லை.

பண்டிதரின் சென்னைப் பேருரை, பொதுவாகவே அனைவருக்கும், குறிப்பாக அவருடைய கட்சியினருக்கும், பல, புதிய, ஆனால் தேவையான உண்மைகளை, எடுத்துவிளக்குவதாக இருந்தது.

அந்தச் 'சிறப்பை' திருவிழாக் கோலத்தைக் கண்டு இலயித்த பலர், மறந்துவிட்டனர். நாம், அந்தச் சிறப்பை, பாராட்டுவது மட்டுமல்ல, சோர்ந்துபோகும் உள்ளம்கொண்ட, எந்தப் பொதுநலத் தொண்டரும், உட்கொண்டு, நெஞ்சுரம் பெறவேண்டிய, வலிவூட்டும் மருந்து, என்று கருதுகிறோம்.

பண்டித நேருவுக்குச் சென்னை காட்டிய அன்பு, அளவில் மிக மிகப் பெரியது, தரத்தில் மிக மிக உயர்ந்தது. அவருடைய பேருரையில், நாம் விசேஷமான பகுதி என்று கருதுவதை, அவர், தமக்கு மக்கள் அளித்த பகத்தான, உபசாரத்துக்கு அளித்த தக்கதோர் பரிசு, என்று கருதுகிறோம்.

இலைகளுக்கிடையே மறைந்து கிடக்கும் கனிபோல், அவருடைய பேருரையில், பெரும்பாலான மக்களின் மனதைச் சுலபத்தில் மகிழ்வித்த பல பகுதிகளுக்கிடையிலே, நாம் குறிப்பிடும் 'விசேஷம்' மறைந்திருக்கிறது—மக்களின் கவனத்துக்கு அதனைக் கொண்டு வருவது, நமது நோக்கம்.

பண்டிதர், மக்கள் மனதிலே அலைமோதிக்கொண்டிருக்கும் பல பிரச்னைகளைப் பற்றி, அன்று பேசினார், விசேஷம் அதிலே இல்லை.

ஜனநாயக அரசுமுறையின் அவசியத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறார். விசேஷம், இதிலே தான் இருக்கிறது.

ஆள்பவர்களின் திட்டங்களைப் பற்றி நன்கு ஆராய்ந்துபார்த்து குற்றங்குறைகள் இருப்பின் எடுத்துரைத்து, மாற்றுத்திட்டம் கூறி, நாட்டுக்கு நலம்புரியவேண்டும் என்பதை விளக்கிக் கூறினார்.

குற்றங்குறைகளை எடுத்துக்கூற ஆட்களே இல்லாமற் போய்விட்டாலும், குற்றம் குறைகளைக் கண்டறியும் பண்பினையே மக்கள் இழந்துவிட்டாலும், உண்மையான ஜனநாயகம் வளரமுடியாது — நாட்டிலே நல்லாட்சி இராது—ஆளவந்தார்கள், ஆணவக்காரராகி விடுவர், என்ற சூட்சமத்தை எடுத்துக் காட்டினார்.

இவ்வளவையும், அவர், பலஇலட்சம் மக்கள் கொண்ட கூட்டத்திலே எடுத்துக் கூறினார்—ஆனால் அதிலே எத்தனை நூறுபேர், அந்ததத்துவத்தைக் கவனித்திருப்பார்கள், என்று ஓர் ஆராய்ச்சி நடத்தினால், ருசிகரமாக, இருக்கும்.

* * *

"ஜவஹர்லால் கூட்டத்துக்குத் தானே போய்விட்டு வந்தீர்!"

"ஆமாம்—அடஅடா! கூட்டமா அது—ஜனசமுத்திரம்."

"நான் கொடுத்துவைக்கவில்லை, எவ்வளவோ முயன்றேன், வரமுடியவில்லை—ஒரு அவசரமான ஜோலி."

"நிஜமாகச் சொல்கிறேன், அப்படிப்பட்ட காட்சியைக் காணாத கண்........"

"ஏனப்பா, என்வேதனையே அதிகப்படுத்துகிறாய். நான்தான் சுருக்கமாகச் சொன்னேனே, நான் கொடுத்து வைக்கவில்லை, என்று"

இப்படி, போய்வந்தவருக்கு, வேறு ஜோலிகாரணமாய் போக முடியாதிருந்தவருக்கு, பேச்சு நடைபெறும்.

அவரைக் காண்பதிலே ஓர் ஆனந்தம்—அவரைக்காணவந்த கூட்டத்தைக் காண்பதிலே ஓர் ஆனந்தம்—தரிசனோற்சவம். இதுதான்முதலாவதாகவும் முக்கியமானதாகவும், ஏற்படக்கூடிய, உணர்ச்சி.

ஒரு நாட்டின் விடுதலைப்போரில் ஈடுபட்டவர், பல ஆண்டுகளாகப் பொதுமக்களுக்குப் பற்றும் பாசமும் ஏற்படக்கூடிய விதமான, பல சம்பவங்கள் அவருடைய வாழ்க்கையிலே ஏற்பட்டன, வாழ்க்கையில் பெரும் பகுதியைச் சிறையில் கழித்தவர்; இன்று நாட்டுக்கு முதல்வராக இருப்பவர், அப்படிப்பட்ட பண்டிதநேரு, ஏறக்குறையப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, சென்னை வருகிறார் என்றால், அவரைக்காண வேண்டும் என்ற எண்ணம், இலட்சக்கணக்கான மக்களுக்குத் தோன்றித்தானே தீரும்.

அவர் சென்னைக்கு வராதிருந்த பத்து ஆண்டுகளும், மக்களின் பார்வையில், அவர் ஒவ்வோர் நாளும் இருந்து வந்தார்.

பண்டிதர் இன்று பரத்பூர் மன்னரைப் பார்த்தார்.

விமான நிலையத்தில் காஷ்மீர மன்னர் நேருவை வரவேற்றார்.

கல்கத்தாவில், பண்டிதர் இரண்டு மணி நேரம் பேசினார், என்று, ஒவ்வோர் நாளும், அவருடைய, அலுவலைப்பற்றியும், அருங்குணத்தைப் பற்றியும்,பத்திரிகைகள் வெளியிட்டு வந்தன.

எனவே, அவர் நித்தநித்தம் மக்களின் மனக்கண்முன் இருந்துவந்தார்-அதேபோதுபத்துஆண்டுகளாக சென்னைமக்கள் அவரைக்காணவில்லை —இந்த நிலையில், தரிசனத்திருவிழா போல், சென்னை காட்சி தந்தது எதிர்ப்பார்க்கக் கூடியது தான். ஆனால், அவரைக்கண்டு களிக்கவும், அவரைப்பற்றிய அருங்கதைகளைப் பேசி அகமகிழவும் தான், அந்த மூன்று நாட்களை மக்கள், பயன்படுத்தினரேதவிர, அவருடைய உரையிலே, காணக்கிடக்கும் பல அரிய உண்மைகளை உணரப் பயன்படுத்தவில்லை. கேட்டுப் பாருங்கள், போய் வந்தவர்களை. பெருந்தலைவர்களை, புண்யவான்கள் என்று எண்ணிடவும், அவர்களைக் காண்பது பாக்கியம் என்று கருதிடவும் தான், பெரும்பாலான மக்களுக்குத் தோன்றும். அந்த வகையினில், இருவர் பேசுவதையே, முன்னால் குறிப்பிட்டோம்.

*   *   *

தலைவர்களின் பேச்சைக் கேட்கும் போக்குடைய, அதாவது அரசியல் கருத்துடையவர்களின், நினைப்பும், பேச்சும், எவ்விதம் இருக்கிறது, இந்தத்திருவிழாவுக்குப் பிறகு, என்றும் பார்ப்போம்.

“சேஷ்பா! சரியான டோஸ் கொடுத்தார், நேரு.”

“டோசா! சாட்டையடி!”

“நெருப்புப் பொறி பறந்ததடா நேரு பேச்சிலே”

“என் உடம்பு, ஒரே கோதிப்பாகி விட்டது”

இப்படி இருக்கும், ஆர்வங்கொண்டவர்களின் பேச்சு.

சற்று ‘விவரத்தில்’ பிரியமுடையவர்கள்,

“முஸ்லீம் லீகுக்கு, நேரு, தெளிவாகவும் திட்டமாகவும் கூறிவிட்டார்”

‘ஹைதராபாத் சர்பங்கமாகவும் கண்டிப்பாகவே கூறிவிட்டார்”

“இரண்டும், ஒரேபிரச்னையின் இருமுனைகள் என்பதைக்கூடஜாடையாகக் காட்டிவிட்டார்” என்று பேசுவர்.

“கம்யூனிஸ்டுகளுக்கு நல்ல சூடு கொடுத்தாரடா நேரு” என்று சிலரும், “வகுப்புவாதிகளின் வாலை, ஒட்ட நறுக்கிவிடுவேன் என்று நேரு சபதம் செய்துவிட்டார்” என்று வேறு சிலரும், “மாகாணப்பித்து கூடாது, அதை எங்கள் முழுப்பலத்தைக் கொண்டு எதிர்த்து ஒழிப்போம் என்று பேசினார் பண்டிதர்” என்று சிலரும் பேசுவர்.

இதைக் கண்டித்தார், கம்யூனிஸ்டுக்குச் சூடு கொடுத்தார், மாகாணப்பித்துக்குக் கசையடி தந்தார், என்று, இந்த ‘தாக்குதல்களை’க் கவனித்த அளவு, ரசித்த அளவு, பண்டிதர், தமது பேருரையில், ஜனநாயக தத்துவத்தைப் பற்றிப் பேசியதை ரசித்திருப்பார்களா, கவனித்திருப்பார்களா, என்றால், மிக மிகச் சந்தேகம் — (கிந்தனார் சம்பவம் போலத்தான்!)

அப்படிக் கவனித்தவர்களிலே பலரும்கூட, ஏன் பண்டிதர் ஜனநாயகக் கோட்பாட்டைப் பற்றி அவ்வளவு பேசினார், அதுபோது, அவருடைய மனதிலே என்ன எண்ணங்கள் தவழ்ந்து கொண்டிருந்திருக்க வேண்டும், என்பதுபற்றிச், சிந்திக்க முனைவர்களா என்று பார்த்தால், மிகமிகச் சந்தேகம் என்றுதான் கூறவேண்டும்.

படத்தைக் கண்டு பாடம் பெறும் பண்புள்ளோருக்கு, நாம், பண்டித ஜவஹரின் விஜயத்தைக் குறித்து வெளியிடப்பட்ட பல காட்சிகளிலே மாபெரும் கூட்டத்தைக் கண்ட நேரு, மேடைமீது, ஓர்புறத்தில், கம்பத்தைக் கட்டிக்கொண்டு, நிற்கும் காட்சி வெளிவந்ததே, அதனைக் கூர்ந்துபார்க்கும்படிக்கேட்டுக்கொள்கிறோம்—இப்போதல்ல — இன்னும் ஒரு வார காலம் கழித்து.

உண்மை ஜவஹரின் உள்ளத்தைக் காட்டும் படம் அது.

எவ்வளவு பிரம்மாண்டமான கூட்டம்! எத்தனை ஆர்வம்! எவ்வளவு பற்று, பாசம்! இவ்வளவும், நாமும் நம்மைச் சேர்ந்தவர்களும், இந்த நாட்டுக்கு நலனை நிச்சயம் செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறோம், செய்வோம், என்ற ஆழ்ந்த நம்பிக்கையின் சித்திரமல்லவா! எவ்வளவு எதிர்பார்க்கிறார்கள் மக்கள்!— என்று எண்ணுகிறார் பண்டிதர், தம் எதிரே வெள்ளம்போல் காணப்படும் மக்கள் இருக்கக்கண்டு.

அவர் அறிவார், இந்த மக்களின் ஆர்வம், மகிழ்ச்சியும் மன எழுச்சியும் மட்டுமல்ல, அவர்களின் எண்ணம் ஈடேற வேண்டுமே, ஈடேறச் செய்யவேண்டிய பெரும் பொறுப்பல்லவா நம்மீது விழ்கிறது, என்ற பயத்தையும், தரும், காட்சிதான் என்பதை.

*   *   *

சோமசுந்தரம், பெட்டியைத் திறந்தான்—நோட்டுக்கள், கத்தை கத்தையாக உள்ளன.

பக்கத்தில் இருந்து பார்த்த, பரந்தாமன் பூரித்தான், “சோமு! எவ்வளவு, தொகை?” என்று கேட்டபடி.

“அரை இலட்சம்” என்று, சோகத்துடன் கூறினான் சோமு.

“ஏண்டாப்பா, சோகத்துடன்

பேசுகிறாய்" என்று கேட்டான், விவரமறியாத பரந்தாமன்.

"பைத்யக்காரா! இது என் நில புலத்தை ஈடுகாட்டி பாங்கியில் நான் வாங்கிய கடன்—என் வாழ்க்கையிலே நான் ஏற்றுக்கொள்ளும் சுமை—இதைக்கொண்டு நான், துவக்கும் வியாபாரம் வெற்றிகரமாக நடந்து, இலாபம் கிடைத்து, இந்தக்கடனைப் பைசல் செய்து, நெஞ்சின்மீது ஏறியுள்ள பாரத்தைப் போக்கிக்கொண்டு, நிம்மதி பெறவேண்டும். இந்தத் தொகை, எனக்குக் திகிலேயும் கவலையையும் தராமல, களிப்பா தரும்" என்று விளக்கமுரைத்தான் சோமசுந்தரம்.

ஜனநாயக முறையிலே, பொது மக்களின் பேராதரவைப் பெறுவது என்பது, சோமசுந்தரம் பெற்ற கடன் தொகை போன்றது—களிப்புக்கு மட்டுமல்ல, கவலை, கலக்கம், ஆகியவற்றுக்கும் காரணமாக இருப்பது.

இதனை, அரசியல்நுட்பங்களையும், மக்களின மனப்பண்பையும் நன்கறிந்த பண்டித ஜவஹர் நன்கு அறிவார். தரிசனைச்சவத்திலே இலயித்தவர்கள் இதனை அறியார்கள்.

இந்தக் காட்சியைக் கண்டதும் சாமான்யர்களுக்கு, வெறும் ஆனந்தம் மட்டுமே உண்டாகும்—ஆஹா! நமக்கிருக்கும் இந்தச் செல்வாக்கு வேறு யாருக்கும் இல்லை—நாமே பாக்கியசாலி என்று எண்ணிக் களித்திருப்பர்—ஆனல் பண்டிதர், அவ்விதம் எண்ணவில்லை—இந்தக் காட்சி அவருடைய மனதிலே, ஜனநாயக திட்டத்தைப் பற்றிய எண்ணங்களைக் கிளறிவிட்டது—எனவே தான், அவர், அன்றைய கூட்டத்தில், ஜனநாயகக் கோட்பாட்டைப் பற்றிப் பேசினார்.

ஆராதித்துவிட்டும் — என்னிடம் அபரிமிதமாக எதிர்பார்த்துவிட்டும், போய்விடாதீர்கள்—என்னைப் புகழ்வதுடன், வரவேற்று உபசரிப்பதுடன் உங்கள் வேலை முடிந்துவிட்டது என்று எண்ணிவிடாதீர்கள்—எல்லா வேலையையும் நானே செய்து முடிப்பேன் என்று கூறி, என்மீதே முழுப் பாரத்தையும் போட்டுவிடாதீர்கள்—இது மக்களாட்சிக் காலம், ஜனநாயக நாட்கள், எனவே அதற்கு ஏற்றவிதமாக, எண்ணவும், செயலாற்றவும் வேண்டும்—அது உங்கள் கடமை, இது மட்டுமல்ல"—என்று பேசினார்.

படத்தை இப்போது பாருங்கள்—பண்டிதர் இந்த வாசகங்களைப் பேசுவது, அவருடைய தோற்றத்தின் மூலமே தெரியவரும்.

* * *

காஷ்மீரைப் பற்றிய பேச்சு, ஹைதராபாத் பற்றிய பேச்சு, லீக் பற்றிய பேச்சு, கம்யூனிஸ்டுகள் பற்றிய பேச்சு, இவைகளெல்லாம், சிற்சில சம்பவங்களைப் பற்றி, அவருடைய கருத்துரைகள்—எனவே, அந்தச் சம்பவங்கள், ஏதேனும் ஓர் வழியில் முடிந்து போகும்போது, அந்தக் கருத்துரைகளின் அவசியமும் தீர்ந்துவிடும்—பிறகு அவை, தேவைப்படமாட்டா. ஆனல், ஜனநாயகத்தைப் பற்றிய அவருடைய பேச்சு, அவ்விதமானதல்ல—அரசியல் இலக்கியத்தில், சேர்ந்துவிடும் அரிய கருத்து, நிலைத்து இருக்கக் கூடியவை, முக்கியமானவை—ஆம்—ஆனல், அந்த முக்கியமான பேச்சுத் தானா, பெரும்பாலானவர்களால், முதலிலே மறந்துவிடப்படும் பேச்சாகிவிட்டது. பண்டிதர் இதைச் சொன்னார், இப்படிப் பேசினார், என்று குதூகலத்துடன் பேசுபவர்கள், பண்டிதர் ஜனநாயகத்தைப் பற்றி இவ்வண்ணம்பேசினார், அதன் பொருள் இது—என்று பேசவில்லை—பேசமாட்டார்கள்.

பண்டிகர் இந்த முறை இங்கு வந்து போனதிலே, முக்கியமான பலனாக நாடு கொள்ளவேண்டியவை என்று நாம் கருதுவது. ஒன்று, ஜனநாயகத்தைப் பற்றிய அவருடைய கருத்துரை, மற்றொன்று, காரைக்குடியில் அவர் விஞ்ஞான வித்திட்டது.

பெரும்பாலான மக்கள், பண்டிதர் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசியதைக் கவனிக்கத்தான் மாட்டார்கள்—ஆனல் அந்தப்பெரும்பாலான மக்களால் நடத்தப்படும் அரசு முறைக்குத்தான் ஜனநாயகம் என்று பெயர்.

நாட்டு விடுதலைப் போர் முடிவுற்று களக் காட்சிகளைப் பற்றியும், களத்தில் படைத் தலைவர்களும் படை வீரர்களும் காட்டிய அபாரமான வீரதீரத்தைப் பற்றியும் பேசும் நிலையில் இருக்கிற இந்நாட்களில், இந்த ஜனநாயக உணர்ச்சியும், அந்த தத்துவத்தின்படி தலைவர்களையும் அவர்களின் திட்டங்களையும் பரிசிலனை செய்வதும், எளிதிலே தோன்றாது. ஆராதனை மனோபாவந்தான் பெரும்பாலான மக்களுக்கு இருக்கும். ஒரு சிலர் மட்டுமேதான் அந்த ஜனநாயகக் கோட்பாட்டை மறவாமலிருக்க முடியும், நாட்டுமக்களின் கவனத்துக்குக் கொண்டு வர முடியும்.

அந்த ஒரு சிலர், பழிக்கப்படுவர்—பழியும் இழிவும்கண்டு, அவர்கள், நமக்கு மட்டுமென்ன, இந்த வீண் தொல்லை, என்று சும்மா இருந்துவிட்டால், பாசிசம் வெற்றி நடையுடன் உள்ளே நுழையும்—பிறகு, எந்தப் பெரும்பாலான மக்கள், ஜனநாயகத் தத்துவத்தைக் கவனிக்காமலிருந்துவிடுகின்றனரோ, அவர்களுக்கேதான் தொல்லையும், சுமையும்—சும்மா இருந்துவிடுவோம் என்று எண்ணி விட்டால், அந்த ஒரு சிலருக்கு சுகமும், பாரிஸ், அங்கோரா, ரோம, மிலான் போன்ற ஏதாவதோர் சுக வாசஸ்தலமும் கூடக் கிடைத்துவிடக்கூடும். இவை தெரிந்திருந்தும், மகத்தான செல்வாக்கு பெற்றுள்ள கட்சியாளரின் கருத்துக்கு முரண்பாடாகவும், திட்டத்துக்கு எதிர்ப்பாகவும், சிலர், பேசுவதும் நடப்பதும். ஏன் என்றால், எந்த ஜனநாயகம் அரும்பவேண்டும் என்று பண்டிதர்கூறுகிறாரோ, அதற்காகவேதான்.

கருத்து வேற்றுமைக்கும், ஆராய்ச்சி மனப்பான்மைக்கும், குற்றங்குறைகள் இருந்தால் எடுத்துக் கூறுவதற்கும், துணிவு மட்டுமல்ல, சற்றுத் தியாக புத்தியும் வேண்டும்—அதிலும் காங்கிரசைப் போன்ற செல்வாக்குப் பெற்று விளங்கும் கட்சியின் கருத்து, திட்டம், ஆகியவற்றிலே, குற்றம் குறை கண்டுபிடிக்க வேண்டுமானல், துணிவும், தியாகபுத்தியும் மிக மிக அதிகமான அளவு இருந்தாக வேண்டும், அந்த ஆஸ்தானத்துக்கு அடங்கி நடந்தால், ஒப்புக்காவது அதன் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டால் கிடைக்கக் கூடிய இலாபம் அதிகம்—ட்ரூமனுடன் பேச வைக்கும், ஸ்டாலினுடன் விருந்துண்ண வைக்கும், பாரிசில் நடமாட வைக்கும், பக்தாதுக்குத் தூதராக்கும், இன்னும் பலப் பல உண்டு கிடைக்கக் கூடிய பலன்கள்—எதிர்த்தால், ஏசனம் கண்டனம் மட்டுமல்ல, சிறை

நாடு கடத்தல், வீட்டில் போட்டு அடைத்தல், விலாமுறியத் தடியடி கொடுத்தல், எனும் பலவகை தண்டனைகள் உண்டு—இந்த உண்மையைத் தெரிந்தும், அந்த ஆஸ்தானத்துப் போக்கைக் கண்டிக்க, சிலராவது முன் வந்திருப்பது, பண்டிதர் காண விரும்பும் ஜனநாயகக் கோட்பாட்டினிடம், உள்ள மதிப்பினுல்தான்.

"It is a dangerous thing to put a few people in authority and to idolize them, as you sometimes idolize me. I want to warn you that it is a dangerous thing, because it is bad not only to the individual who is idolized in this way, but you also get into wrong habits. You tend to make that person function, shall I say in an autocratic manner. You tend to create possible an oligarchy of such individuals..."

குறிப்பிட்ட சிலரை ஆராதனைக்குரியவர்களாக்கி விடுவது ஆபத்தான செயல்!

ஆராதிக்கப்படுபவருக்கு மட்டுமல்ல இதனுல் கேடுதல், நீங்களே கூட, தவருன சுபாவத்தைப் பெற்றுவிடுகிறீர்கள். ஆராதிக்கப்படுபவரைச் செருக்குடன் நடந்து கொள்ளச் செய்துவிடுகிறீர்கள்.

பண்டிதரின் ஆங்கிலப் பேச்சின் சாரச் சுருக்கம் இது.

இந்த வெளிப்படையான பேச்சு, பண்டிதருக்கு ஏற்கனவே உள்ள பெருமையை மேலும் அதிகப்படுத்தும், வகையினது என்போம்.

மக்களிடம் மதிப்பும் செல்வாக்கும் பெற்றுக்கொண்டு, அதே செல்வாக்கைச் சொக்குப் பொடியாக்கி மக்கள்மீது வீசி, அவர்களை, பக்தர்களாக்கி, சுய சிந்தனையும், செயலும் மாற்ற முடியாத நிலையில் வைத்திருக்க வேண்டுமென்றுதான், ஜனநாயகத்தின் பேரால், வாழவிரும்பும் புரட்டர்கள், எண்ணுவர். பண்டிதர் இந்தப் போக்குக்கு நேர்மாருக, அன்று பேசினது கேட்க, மிக மிகக் களிக்கிறோம்.

ஒரு சிலரைப் பூஜித்து, பீடத்தில் அமர்த்திவிட்டு, அவர்களை இஷ்டம்போல நடக்கவிட்டுவிட்டதால், சில பல நாடுகளில், தமது காலத்திலேயே நடைபெற்ற கேடுகளைப் பண்டிதர் நன்ருக அறிந்திருக்கிருர்; எனவேதான், பூஜிக்கவந்த மக்களுக்கே, புத்தி புகட்டினர், இந்த ஆபத்தான போக்குக் கேடு தரும்—முறையே தவறு என்று எச்சரித்துப் பேசினர்.

"Without criticism strong criticism and the pointing out of the error of their ways, people in authority often go wrong. They get swollenheaded. They get complacent. They thing everything they do is right and everything else is wrong."

பண்டிதரின் விளக்கத்திலே, பிரிதோர் பகுதி இது.

ஆளவந்தார்களின் முறைகளிலே உள்ள குற்றங்குறைகளைக் கண்டறிந்து கூருவிட்டால், அவர்கள் தவருகப்போய்விடக் கூடும். தாங்கள் செய்வதெல்லாம் சரியானவை. மற்றவை யாவும் தவருனவை. என்று எண்ணிவிடத் துணிவர்.

பண்டிதரின் பேச்சின் சுருக்க உரை மேலே தந்திருப்பது.

இவ்வளவும், சாதாரணமாக உள்ள அரசியல் கட்சிகள் பற்றி அவர் கூறியது—பொருத்தமான எச்சரிக்கைதான்—ஆனுல் காங்கிரஸ், புனிதத் திருச்சபை, அதன் தலைவர்கள் விஷயத்திலே, மக்கள், அவர் கூறிய முறையைக் கையாளத் தேவையில்லை என்று எங்கே மக்கள் எண்ணிவிடுகிருர்களோ என்று கருதிய பண்டிதர், அதைப் பட்டவர்த்தனமாகக் கூறிவிட்டார்.

"That is a dangerous habit of all those who get into positions of authority, even though they might be Congressmen."

அதிகாரத்தில் அமருகிறவர்களுக்கு, இந்த ஆபத்தான சுபாவம் அனேகமாக வந்துவிடுவது வாடிக்கை—அவர்கள் காங்கிரசாராக இருந்தாலுங் கூடத்தான்!—என்று கூறுகிருர். (பண்டிதரின் ஆங்கிலச் சொற்பொழிவிலிருந்து இங்கு எடுத்துக் காட்டப்பட்டவை, 26—7—48-ல் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" என்ற இதழில் உள்ளவை.)

அரசன் ஆண்டவனின் பிரதிநிதி—தவறு செய்யான்—செய்தாலும், அரசனைக் கேட்கும் அதிகாரம் பெற்றவர்கள் மக்கள் அல்ல—என்ற கோட்பாடு, முடியரசுக் காலத்து மூடமதி. அதை முறியடிக்க விடுதலை விரும்பிகள் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. குடி அரசு பிறந்தது. அதிலே, முடிசூடா மன்னர்கள் கிளம்பினர் — இவர்களின் பேச்சை மறுப்பதும், போக்கைச் சந்தேகிப்பதும், திட்டத்தைத் திருத்த முனைவதும், ஆண்டவனின் சாபத்தை அல்ல, பொதுமக்களின் கோபத்தைக் கிளறும் காரியம், என்று பேசப்பட்டும், நம்பப்பட்டும் வருகிறது. இது, எவ்வளவு ஆபத்தானது என்பதைப் பண்டிதர் எடுத்துரைத்தார்.

அவருடைய பேருரையில் பெரும்பாலான மக்களின் கவனத்திலிருந்து சுலபத்திலும் விரைவிலும், இந்த முக்கியமான பகுதிதான், மறைந்துவிடும். மக்களின் இயல்பு அது. எனவேதான், யாரேனும் சிலர், எத்தகைய தொல்லை எனினும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாகி, ஆளவந்தார்களை நோக்கிலேயும் போக்கிலேயும் குற்றங்குறை இருப்பின் எடுத்துக்காட்ட முன்வந்தாக வேண்டும்.

நாம், அந்தக் கஷ்டமான காரியத்தில ஈடுபட்டிருக்கிறோம்.

நமது செயல், சரியா, தேவையானதுதானு என்று நமக்கு இருந்துவந்த கொஞ்சநஞ்சம் சந்தேகமும், பண்டிதரின் பட்டவர்த்தனமான பேச்சினுல் போய்விட்டது. ஆம்! அவர் அரும்பவேண்டும் என்று கருதுகிற, ஜனநாயகத்துக்கு, நாம் பணிபுரிகிறோம்; அந்தச் செயல் சந்தேகிக்கப்பட்டு, நாம், அதிகாரம் பெற்றவர்களால் கொடுமைப்படுத்தப்பட்டாலும், பண்டிதர் கூறிய மக்களாட்சி எனும் மாண்புள்ள பயிர் வளர, நமது உடலும், உயிரும், 'உரம்' ஆக்கப்பட்டது என்று எண்ணுவோம் — களிப்புடன் கடமையை நிறைவேற்றுவோம். உண்மையை, காட்டுமிராண்டிகளுக்கு மத்தியில் எடுத்துக் கூறி, உரைக்கவும் நடுக்கமெடுக்கும் கொடுமைக்கு ஆளான உத்தமர்கள் வாழ்ந்த, இடம், உலகம். நமது நாட்கள், அப்படிப்பட்டவையல்ல — எனவே உண்மையை உரைப்பதால் ஊறு ஏற்படக்கூடுமெனினும், அது, முன்னுளில், பலர் அனுபவித்த கொடுமைகளை விடக் குறைவாகத்தான் இருந்து தீரும். எனவே, களிப்புடன் மட்டுமல்ல, சற்றுத் தைரியத்துடனும், அந்தப் பணியைப் புரியலாம். பண்டிதரின், அந்த வாக்கியங்களை, பொதுநலத்தொண்டு புரியும் ஒவ்வொருவரும் மனதிலே

பதியவைத்துக்கொண்டு, பணிபுரிய வேண்டும்.

முடியாட்சிக் காலத்திலே, மன்னனின் மமதையை, மந்திரிகூடக் கண்டிக்க முடியாது—வேலை நிலைக்க வேண்டுமானால்

அரசனைக் கண்டிக்கும் அறிவினை அடவிக்குத் துரத்து—என்றோர் உத்தரவு பிறப்பிக்க முடியும், முடிதாங்கியால்!

ஜனநாயக நாடுகளில்; ஆளவந்த என்னைக் கண்டிக்கும் இந்த ஆணவக்காரன் யார், என்று பேசமுடியாது.

இது நமது நாடுகளிலே உள்ள வசதி.

ஆனால், இந்த வசதியைக் கெடுக்க, ஜனநாயக நாடுகளிலே, ஆளவந்தார்கள் ஓர் தந்திரத்தைக் கையாள்வர். தங்கள் திட்டத்தின், குற்றங் குறைகளை, எடுத்துக் கூறுவோர்மீது, பழி சுமத்தி, பொதுமக்களின் சீற்றத்தைக் கிளப்பிவிட்டு அந்தக் குற்றங் குறைகள், வெளியே தெரியவொட்டாது செய்துவிடுவர்.

அவன் ஓர் தேசத்துரோகி. நம்ப வேண்டாம் அவன் பேச்சை! அவன் பிற்போக்காளன், செவி சாய்க்காதீர்!! அவன் ஓர் வகுப்பு வாதி! இப்படிப் பல உண்டு, பழி சுமத்த! பொதுமக்களுக்கு, என்னென்ன சொன்னால், கோபமும் கொதிப்பும், அலட்சியமும், ஆவேசமும் உண்டாகுமோ, அத்தகைய பழிகளைச் சுமத்தி, தமது அரசியல் எதிரிகளை அழிக்கும் தந்திரம், ஜனநாயகம், எனும் பயிரிலே, படுத்துக் கிடக்கும், விரியன் பாம்புக்குட்டி. அது தீண்டி, இறந்துபட்டவர்கள் பலப் பலர்! ஆயினும், அதற்கு அஞ்சி, உண்மையை உரைக்காதிருப்பது உயர் குணமுமல்ல, மக்களை வாழவைக்கும் பணியுமாகாது.

நாம், ஜனநாயக ஆட்சி முறையை வளர்க்க எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை, சர்க்காரைக் கவிழ்க்கும் சூழ்ச்சி என்று, கூறிப், பழி சுமத்துவது, பிரசார சாதன பலம் பெற்ற காங்கிரசுக்கு, மிக மிக எளிதான காரியம். நமது காங்கிரஸ் நண்பர்கள் அதிலே சிறந்த அனுபவமும் பெற்றுள்ளனர்.

இவ்வளவு விளக்கமாக, ஜனநாயகக் கோட்பாட்டின் அவசியத்தை வலியுறுத்திப் பேசின பண்டிதரிடம், நமது கொள்கை, திட்டம், பிர

சாரம் ஆகியவைபற்றி என்ன கூறியிருப்பார்கள்!

பச்சை வகுப்புவாதிகள்

நாத்திகக் கூட்டம்

பிராமணத் துவேஷிகள்

நாட்டைத் துண்டாடுபவர்கள்

மாகாணப் பித்தர்கள்

இப்படித்தானே, அர்ச்சித்திருப்பார்கள்! இந்தப் பழிகளைச் சுமத்திவிட்டால், நாமது பணியைப் பொதுமக்கள் சந்தேகிக்காமலிருக்க முடியுமா? ஆனால், அவர்களின் பழி சுமத்துதலுக்கு, அதை நம்பி, நம்மைச் சந்தேகிப்பவர்களின் போக்குக்கும் பயந்து, கடமையைச் செய்யாதிருப்பதா என்று யோசித்தால், பண்டிதர் கூறுகிறார், அது ஆபத்தான போக்கு என்று—எனவே பணி செய்தாக வேண்டும் என்று ஏற்படுகிறது.

பொதுமக்கள் தவறான எண்ணம் கொண்டு சந்தேகிப்பர் என்பதுகூட இருக்கட்டும்; பண்டிதரேகூட, இந்திய பூபாகத்திலே, இயற்கை முறைக்கும் கலாச்சார முறைக்கும் முரணாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகள், தனி அரசுபெற்றுத் தழைத்து வாழ விரும்பினால், அதனைத் தவறாகத்தானே எண்ணுகிறார்!

அதனை, அந்தந்தப் பகுதியில் வாழும் மக்களின் விடுதலை வேட்கை என்று எண்ணக் காணோம்—அதனை மாகாணப் பித்து என்று கூறி, அதனை ஒழித்துத் தீருவோம் என்றல்லவா கூறுகிறார்.

பித்துக்கூடாது, நிச்சயம் கூடாது, மாகாணப்பித்து மட்டுமல்ல—எத்தகைய பித்தமும் கூடாது—ஆனால் கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால், பலப்பல நூற்றாண்டுகள், தனி அரசாக விளங்கி, தனக்கென ஓர் பண்பு பெற்று வாழ்ந்து வந்த பகுதி, திருஇடம்; இதுபோது, டில்லி நோக்கித் தண்டனிட்டு வாழ்வது முறையாகாது. முழுவலிவும் பொலிவும் பெற்றதாக இருக்க வேண்டுமானால், அரசுரிமை பெற்ற நாடாக விளங்கவேண்டும், இந்திய பூபாகத்திலே உள்ள மற்ற இடங்களிடம், நேசமாக, ஒன்றுக்கொன்று துணைபுரியும் தோழமையுடன்வாழ வேண்டும், தன் அகத்தே வாழும் மக்களின் பண்புக்கு ஏற்ற விதமான, சமூக, மத, பொருளாதார முறைகளைக் கொண்டதாகத் திகழவேண்டும். இதற்குத்தான், திராவிடநாடு திராவிடருக்கு என்று கூறுகிறோம், என்றால், இவ்வளவுதூரம் ஜனநாயகத்துக்காகப் பரிந்து பேசும் பண்டிதர், மாகாணப்பித்து என்று இதற்குப் பெயரிடுவதா?

சரி, சரி, நீங்கள், தனி அரசினால் வரும் நலன்களை எடுத்துக்கூறுங்கள் மக்களிடம்—அது தவறு, கூடாது, இந்தியா ஒரே நாடாகத்தான் இருக்கவேண்டும்—மத்திய சர்க்காரிடம் தான் மகத்தான அதிகாரம் இருக்கவேண்டும், என்று நானும் என்னைச்சார்ந்தவர்களும் எடுத்துக் கூறுகிறோம்—மக்கள், யார் கூறுவதை, ஏற்றுக் கொள்கிறார்களோ பார்ப்போம்—முடியுமானால் மக்களை உன் திட்டத்திற்கு ஆதரவு தரும்படி செய் — என்றல்லவா, கூற வேண்டும்.

இதுவும் மித்திரனும், வெறும் காகிதங்களா!!

இடிமுழக்கமிடக்கூடிய காங்கிரஸ் தலைவர்கள், சாமான்யர்களா!

ஏன், அவர்கள், நமது திட்டம் தவறு என்பதை எடுத்துக்காட்டிட முடியும், இதற்காக, திராவிடர்கழகத்தினரின் வாயைக் கட்டவேண்டிய அவசியமில்லை, என்று, ஆர்வத்துடன் கூறக்கூடாது.

அது வகுப்புவாதிகளின் வெறி—மாகாணப்பித்து — நாத்திகரின் பேச்சு—என்று பழி சுமத்துவதா! நேர்மையா, ஜனநாயக தத்துவந்தானா இது?

போகட்டும், பழி சுமத்துவது மட்டுமா, கழகத்தைக் கலைத்துவிடு—தடை உத்தரவு பிறப்பி—தலைவர்களைச் சிறையில்தள்ளு-பத்திரிகைகளை அடக்கு—நாடகங்களை நிறுத்து—புத்தகங்களைப் பறி முதல் செய்—இந்தப் போக்கிலேயா, ஆளவந்தார்கள் நடந்து கொள்வது? இங்ஙனம் நடந்து கொண்டால் பண்டிதர்கள் விரும்பும் ஜனநாயகம், எங்கிருந்து அரும்பும்?

உண்மையை உரைத்திடுவதால், ஊராள்வோராலும், அவர்களின் தூண்டுதலால் கிளம்புவோராலும், கொடுமைக்காளாகும், உண்மை உழைப்பாளிகளின், கண்ணீரும் இரத்தமும் தான், ஜனநாயகப் பயிர் வளர, நீராகப் பாய்ச்சியாக வேண்டும்.

பண்டிதர், ஜனநாயகத்தின் இலட்சணத்தையும், அவசியத்தையும் வலியுறுத்தினர். அந்தப் பாதையில் செல்வோருக்கு உள்ள கஷ்டங்களை நாம் கூறுகிறோம், பாதையிலிருந்து நண்பர்கள் விலகவேண்டும் என்பதற்கல்ல, பாதை கடினமானது, ஆனால் பணி முக்கியமானது, என்பதை வலியுறுத்த.

திராவிடர் கழகத்தின் திட்டம், வெறும் பித்தம், என்றால், பிரசார பலமிருந்த காங்கிரஸ், மக்களுக்கு, எடுத்துக்கூறட்டும்.

பழி சுமத்துவது, அடக்குமுறை கொண்டு, திராவிடர் கழகத்தை அழிக்க நினைப்பது அழகுமல்ல, அறமுமாகாது, வெற்றியும்தராது.

எதனை, 'மாகாணப்பித்து' என்று பண்டிதர் கூறிக் கண்டிக்கிறாரோ, அந்தப்பித்து, நமது நாட்டளவோடு இல்லை—

இன்றைய நிலையில், அந்த 'உணர்ச்சி' எந்த அளவுக்குவெளியே தெரிகிறதோ, அது, முழு அளவல்ல.

பல்வேறு காரணங்களால், முழு அளவு வெளியே தெரியாமலிருக்கிறது.

அளவு, அதிகம் என்பது மட்டுமல்ல, அது வளர்ந்துகொண்டும் இருக்கிறது, வளரத்தான் செய்யும்.

விடுதலை வசந்தோற்சவம், சில காலம் இந்த வளர்ச்சியைத் தடைப்படுத்தும்.

விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கஷ்டநஷ்டமடைந்து, மக்களின் பேராதரவைப் பெற்றிருக்கும் தலைவர்களின் செல்வாக்கு, இந்த வளர்ச்சியைத் தடைப்படுத்தும்—சிலகாலம்.

ஆனால், இந்த வளர்ச்சி நின்றுவிடாது—இதனை 'ஒழித்துக்கட்ட' எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கையும், வளர்ச்சிக்கு உரம் போடுவதாக இருக்குமே ஒழிய, உருக்குலைத்து விடுவதாக முடியாது.

இந்த உண்மையை, உயர்நிலையிலுள்ள தலைவர்கள் உணராமலில்லை.

ஆனால், அவர்களுக்குள்ள ஒரு தைரியம், தமக்கு இன்றுள்ள செல்வாக்கைக்கொண்டு, இந்த உணர்ச்சியை ஒரே அடியாக ஒழித்து விடலாம் என்பது. மற்றோர் தைரியம், தமக்குள்ள இந்தச்செல்வாக்கு, நீண்டகாலம் இருக்கக்கூடியது, நிலைத்திருக்கக் கூடியது என்ற எண்ணம்.

இரண்டும், தவறு என்பதை, எதிர்காலம் எடுத்துக்காட்டத்தான் போகிறது.

சர்வாதிகாரிகளின் செல்வாக்குச் சரிந்ததை நமது நாட்களிலே கண்டோம். ஜனநாயகத் தலைவர்களின் செல்வாக்கும் கூட, பலபொதுஜன எதிர்ப்புப்புயலைச் சமாளித்தாலும்கூட, கடைசிவரை, நிலைத்திருக்கவில்லை, என்பதையும் பார்த்துக்கொண்டுதான் வருகிறோம். பிரமாதமான பலன்களை, நலன்களை, எதிர்பார்த்துள்ள மக்கள், ஜனநாயகத்தில், தலைவர்களிடம் காட்டும் ஆதரவு, திரட்டிதரும் செல்வாக்கு, உருவாக எவ்வளவு காலம் பிடித்ததோ, அவ்வளவு காலமல்ல, அதைவிட விரைவிலே, எதிர்பார்க்கப்பட்ட பலன்களும், நலன்களும், குறிப்பிடத்தக்க அளவு கிடைக்கவில்லை என்றால், சரிந்துவிடும். எகிப்திய முன்னாள் முதலமைச்சர் நகாஸ்பாஷா, பத்திரிகைகள் எங்கும் நிறைந்திருந்தார். அவர் நடையுடை, உடை, பாவனை, பேச்சு, மூச்சு, சகலமும், பத்திரிகைகள் மூலம், மக்களுக்குப் பெருவிருந்தாக்கப் பட்டன.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலே ராஜதந்திரிகளின் உரையாடலில், நகாஸ்பாஷா வைப்பற்றிய குறிப்புரை வராதிருப்பதில்லை. எகிப்திய தேசீயத்தின் சின்னம் — விடுதலை முரசு—வீரத்தலைவன் —வாலிபரின் தோழன்—மாணவரின் மனதைக் கொள்ளைகொண்டோன்—என்றெல்லாம் சிறப்புரைகள் வழங்கினர்—சிந்து பாடினர். வீணுக்குமல்ல, காரணமற்றுமல்ல, வெறும் விளம்பரதந்திரமுமல்ல. உண்மையாகவே, நகாஸ்பாஷாவுக்கு, அபரிமிதமான பொதுமக்கள் ஆதரவு இருந்தது.

ஆனால்?

நகாஸ்பாஷா, இன்று, பத்திரிகையிலே தலையங்கப் பீடத்திலிருந்து, இறக்கப்பட்டு விட்டார்—பொதுஜனம், வேறோர் தலைவனைப் பூஜிக்கக் கிளம்பி இருக்கிறது.

ஏன்?

ஜனநாயக தத்துவத்திலே உள்ள 'ரகஸ்யம்' அதுதான்!!

சீனத்தலைவன், சீயாங்கேஷேக் உலகின் கண்களுக்கு, சீனாவை உய்விக்கவந்த உத்தமராகத்தான் காட்சி தந்தார். சீனவிடுதலைப்போரில், அவர் காட்டிய ஆற்றலும் ஆர்வமும், பட்டகஷ்டநஷ்டமும், உள்ளபடியே, மானிலம்கண்டு மதிக்கக்கூடிய அளவிலும், முறையிலும் தான் இருந்தது.

ஆயினும், இன்று?

சியாங்கே ஷேக்குக்கு, எதிர்ப்பு, பேச்சு, எழுத்து, உருவிலிருந்து மாறி, வெடிகுண்டு, விஷப்புகை என்றாகிவிட்டது. கட்சிச்சண்டை அல்ல, இப்போது—களம்.

ஏன்?

பொதுமக்களின், 'பூஜாஉணர்ச்சி'யின் கால அளவை, சியாங், நிர்ணயிக்கவில்லை, சரியாக. அந்தஉணர்ச்சி நீண்டகாலம் நீடித்திருக்கும் என்று எண்ணினர்—'இந்தச் செயல்மக்களுக்குப் பிடிக்காது, எனினும், அவர்கள் என்மீது அபாரமான பிரேமை கொண்டவர்கள்—என் தியாகத் தழும்புகளைக்கண்டு, என்னைப் பூஜிப்பவர்கள், எனவே, தவறே செய்தால்கூட, பொறுத்துக்கொள்வர்—மறந்திடுவர்—மன்னித்திடுவர்' —என்று கருதினர். களத்திலே கொண்டுபோய் அவரை நிறுத்தி இருக்கிறது, தப்புக்கணக்கு!

அயர்லாந்தின் முதலமைச்சர், முடிசூடா மன்னராகவே இருந்துவந்தார். அந்த நாட்டிலே, அவரன்றி வேறு தலைவர்கள், வேறு கட்சிகள் உண்டு, என்பதைக்கூட, உலகிலே பெரும்பாலான மக்கள், அறியாத அளவுக்கு அவருடையசேதியும், சிறப்பும், செல்வாக்கும் உலக பத்திரிகைகளில், இருந்தன.

ஆனால், இன்று!

யாரோ, 'ஊர்பேர்' தெரியாதவர் அயரை, ஆள்கிறார் — அயரின் முடிசூடா மன்னர், கல்கத்தா, டில்லி, பம்பாய்க்காட்சிகளைக்கண்டு களித்திடவும் கூட அவகாசம் கிடைக்கப் பெற்றார்.

ஏன்? அதுதான் ஜனநாயகத்தின் இரகசியம்.

மற்றநாடுகளைவிட, இங்கு, ஆராதனைப்பழக்கம் அதிகம் — பூஜா உணர்ச்சி அதிகம்.

எனவே, பொதுஜனத் தலைவர்களின் செல்வாக்குக் காலம், மற்ற இடங்களிலே, உள்ளதைவிட, சற்று அதிக காலம் நீடித்திருக்க முடியும்.

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சிபுரம்] 1—8—48 [ஞாயிறு

இந்தி எந்த வடிவத்தில் வந்தாலும் எதிர்ப்போம்

அண்மையில் சென்னைக்கு வந்திருந்த பண்டித நேரு அவர்கள், இந்திமொழி பற்றிய ஒரு உண்மையை விளக்கிப் பேசினார். அந்த உண்மை, இந்தியை இங்குள்ளவர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறப்படும் காரணங்களுக்கு முற்றிலும் புறம்பானது.

இங்கு, இப்பொழுது, இந்தியைத் தமிழ் மக்கள் படிக்க வேண்டுமென்று சொல்லப்படும் காரணங்களில் முதலிடம்பெற்று நிற்கும் காரணத்தையே பண்டித நேரு அவர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

பத்து ஆண்டுகளுக்கு முன், தோழர் இராசகோபாலாச்சாரியார் அவர்கள் இந்தியை இங்கு கட்டாய பாடமாக்கியபோது, அவர், இந்நாட்டுக்கு ஒரு பொதுமொழி வேண்டுமென்று கூறப்படும் காரணத்துக்கு முதலிடம் அளிக்கவில்லை. அவர், இந்தியாவின் பழைய நாகரிகம் சமஸ்கிருதத்திலேயே அடங்கி இருக்கிறதென்றும், சமஸ்கிருதப்படிப்பை அசட்டை செய்யக் கூடாதென்றும், சமஸ்கிருதத்தின் மறுவடிவமே இந்தியென்றும், ஆகையால், அதனை எல்லோரும் கட்டாயம் படிக்கவேண்டுமென்றுமே கூறி இந்தியை இங்கு கட்டாய பாடமாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இங்குள்ள சமஸ்கிருத விரும்பிகளும் இந்த முயற்சிக்கு ஆதரவு தந்தனர். ஆனால், தமிழ் மக்களின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் அந்தமுயற்சியை அப்பொழுதே முறியடித்துவிட்டது.

இப்பொழுது, மீண்டும் அந்த முயற்சி துவக்கப்பட்டிருக்கிறது. இது, தேவையற்ற—பயனற்ற—பொருத்தமற்ற முயற்சி என்பதைப் பண்டிதநேரு அவர்கள் தெளிவாகவும் திட்டமாகவும் விளக்கிவிட்டார். இந்தி மொழியில் சமஸ்கிருதம் கலக்கப்படுவதை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒப்புக்கொள்ள முடியாதென்று கூறிவிட்டார். மத்திய சட்டசபையில் இது பற்றிய விவாதம் வருமென்றும் அப்போது, தாம் அதைத் தம்முடைய முழுப் பலத்தைக் கொண்டு எதிர்ப்பதாகவும் கூறிவிட்டார். இந்த உண்மையை வெளியிட்ட பண்டிதநேரு அவர்களை நாம் பாராட்டுகிறோம். பாராட்டுகிறோம் என்றவுடனே, சிலர், "அப்படியானால் நீங்கள் சமஸ்கிருதம் கலவாத இந்தியை ஏற்றுக் கொள்கிறீர்களா—கற்றுக்கொள்வீர்களா?" என்று கேட்பர். இந்தி எந்த வடிவத்தில் வந்தாலும், அதனை எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற திட்டமான முடிவு இதனால் ஒருபோதும் சிதைந்துவிடாது—சிதைத்து விடவும் முடியாது.

ஆனால், இந்தியை இந்நாட்டில் பரப்புவதன் வாயிலாக இறந்துபட்ட சமஸ்கிருதத்துக்கு உயிர் பிச்சை அளிக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டதே என்று இங்குள்ள சிலர் வீராப்புப் பேசுகின்றனரே, அவர்களுக்குப் பண்டிதநேரு அவர்கள் சரியான பாடம் கற்பித்தார்—இந்தி பரப்பப்படுவதில் உள்ளே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் உண்மையை வெளிப்படுத்தி விளக்கிக் கூறினார் என்பதற்காகவேதான் நாம் அவரைப் பாராட்டுகிறோம். தோழர் சி. ஆர். ரெட்டி அவர்கள் போன்ற சிலர், சமஸ்கிருதத்தையே இந்நாட்டின் பொதுமொழியாக்கி விடலாம் என்று இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பாடுபடுகிறார்களே, அவர்களுக்குப் பண்டிதர் அவர்கள் சரியான சாட்டை கொடுத்தார் என்பதற்காகவே நாம் அவரைப் பாராட்டுகிறோம்.

இந்தியில் சிற்சில சமஸ்கிருதச் சொற்கள் சேர்ப்பதையே நேரு அவர்கள் எதிர்க்கிறார் என்றால், சமஸ்கிருதச் சொற்கள் மக்களுக்குப் புரியாதவை—தேவையற்றவை என்பதைப் பண்டிதர் அவர்கள் ஒப்புக்கொள்கிறார் என்றால், சிலர் பொறுப்பற்ற முறையில், சமஸ்கிருதத்தையே இந்நாட்டின் பொதுமொழியாக்கி விடலாம் என்று கனவு காண்கிறார்களே என்பதை எண்ணும்போது, இவர்கள் எவ்வளவு சுயநலத்தில், நாட்டுக்கும் மக்களுக்கும் தேவைப்படாத ஒன்றைச் செய்துவிட வேண்டுமென்ற முனைப்பில் ஈடுபடுகின்றனர் என்பது நன்கு புலனாகின்றது.

பண்டிதநேரு அவர்களே கூறுகின்றார், தமிழ், இலக்கிய இலக்கண அமைப்புப் பெற்ற ஒரு சிறந்த பழைமையான முதல்மொழி என்று. இப்போது மட்டும் அவர் இதனைக் கூறவில்லை, அவரால் எழுதப்பட்ட புத்தகங்களிலும் தமிழைப்பற்றியும், தமிழ் மக்களைப் பற்றியும் சிறப்பாகவே கூறியுள்ளார். என்றபோதிலும், அவருக்கு, இலக்கிய இலக்கணச் சிறப்பு வாய்ந்த பழைமையான தமிழ் மொழியையே இந்நாட்டின் பொதுமொழியாக்கலாம் என்ற எண்ணம் உண்டாகவில்லை. இதுபற்றி நாமும் கவலைப் படவில்லை—கவலைப்படக் காரணமுமில்லை. ஏனென்றால், இந்நாட்டுக்கு, எந்தக் காரணத்தைக் கொண்டும்—எந்தக் காலத்திலும் இனி, ஒரு பொதுமொழி தேவையில்லை என்ற உண்மையை உணர்ந்திருப்பதால். இது மட்டுமல்ல, இப்போது, தென்னாட்டவர், வடநாட்டவரின் தொடர்பை அடியோடு அறுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இனி எக்காரணத்தைக் கொண்டும் வடநாட்டவர், தென்னாட்டவரை ஆட்டிப் படைக்க இடமளிக்கக் கூடாதென்றும் முடிவு செய்து, நாட்டுப் பிரிவினையின் அடிப்படை மீது இந்நாட்டு (திராவிட நாட்டு)ச் சமூக—அரசியல்—பொருளாதார அமைப்பு முறைகள் எல்லாம் ஏற்பட வேண்டுமென்ற அசைக்க முடியாத திட்டத்தைக் கொண்டுள்ளனர். எனவேதான், பண்டித நேரு அவர்கள், தமிழ் மொழியே இந்நாட்டின் பழைமையான சிறந்த மொழி என்பதை அறிந்தும், அதனைப் பொதுமொழியாக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கொள்ளவில்லையே என்பதற்காக அவர்மீது நாம் குறை சொல்ல முற்படவில்லை என்று கூறுகின்றோம்.

இனி, நாட்டு நலனை விரும்புகின்றவர்கள், அவர்களுடைய முயற்சிகள் எல்லாம் உயர்ந்த—உண்மை

யான கருத்துக்களானாலும், திட்டங்களானுமே நடத்தப்பட வேண்டுமென்பதற்கும், பண்டிதநேரு அவர்கள், சமஸ்கிருதம் பற்றிக் கூறியது ஒரு சிறந்த பாடமாகும். சமஸ்கிருதம் உண்மையாகவே நாட்டு நலனுக்குரிய சிறந்த கருத்துக்களைக்கொண்டுள்ளதென்றால், நாட்டை ஆளும் பொறுப்பின் முதற்பீடத்தில் அமர்ந்திருக்கும் பண்டிதநேரு அவர்கள் சமஸ்கிருதத்தைப் பற்றிய தம்முடைய கருத்தை இவ்வாறு ஒருபோதும் வெளியிட்டிருக்கவே மாட்டார். சமஸ்கிருத அறிவு, நாட்டு நலன் குறித்துச் செய்யப்படும் எந்தப் பணிக்கும் ஏற்புடையதல்ல என்பதனாலேயே, உயர்ந்த—உண்மையான கருத்துக்கள் எவையும் சமஸ்கிருதத்தில் இல்லையென்றும், அதனைப் பரப்பும் முயற்சிக்குத் தாம் எதிரியாகவே இருப்பேன் என்றும் ஒளிவு மறைவு இன்றி வெளிப்படையாகவே கூறிவிட்டார்.

இந்த நிலையில், சமஸ்கிருதமும் மாணவர்களால் கட்டாயமாகக் கற்கப்பட வேண்டிய மொழிகளில் ஒன்றெனச் சேர்த்திருக்கும் இன்றைய குழப்பமான—அவருக்கே புரியாத திட்டத்தை வகுத்திருக்கும் நமது கல்வியமைச்சர், பண்டிதநேரு அவர்கள் சமஸ்கிருதத்தைப்பற்றிக் கூறிய கருத்துக்களை ஊன்றிக் கவனித்து, மாணவர்களும், அவர்களால் நாடும் நலம் பெறக்கூடிய கல்வித் திட்டத்தை—அத்துறையில் வல்லுனர்களாய் இருப்பவர்களின் துணைகொண்டு அமைக்கும் முயற்சியில் இனியாவது ஈடுபடுவார் என்று நினைக்கிறோம்.

இனி, ஒரு மொழி, பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கிக்கொள்வதால் அம்மொழிவளர்ச்சியடையுமேயன்றி ஒருபோதும் கெட்டுவிடாதென்றும் சொல்லப்படுகின்றது. இதில் ஓரளவு உண்மையில்லாமலுமில்லை. அதாவது, தனக்கெனச் சொற்களை ஆக்கிக்கொள்ளும் வளமற்ற மொழிகளுக்கு இந்த முறை தேவைப்படலாம். ஆனால், தமிழ் மொழிக்கு இந்தக் கடன் வாங்கிப் பிழைக்கும் இரங்கத்தக்க நிலை இல்லை. தமிழ், தனக்கு வேண்டிய எல்லாச் சொற்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. காலமாறுதலுக்கு ஏற்பப் புதுபுதுச் சொற்களை உண்டாக்கிக் கொள்ளும் நிலை ஏற்பட்டாலும், அச்சொற்களுக்கு ஏற்பக், கருத்தில் மாறுபடாத சொற்களைப் புதிதாக உண்டாக்கிக்கொள்ளும் திறமையும் தமிழுக்கு உண்டு. இனிஒருவேளை யாதாயினும் ஒரு சொல் தமிழில் உண்டாக்கிக்கொள்ள முடியாதநிலை (ஏற்படாது) ஏற்பட்டால்-அந்தச்சொல் மக்களின் வாழ்க்கைக்குஇன்றியமையாத தேவைபடுமென்று கண்டால்-அந்தச் சொல்லை, அது எந்தமொழியில் இருந்துவந்ததோ அந்தமொழிச் சொல்லாகவே வைத்து வேண்டுமானால் தமிழ்மொழியோடு இணைத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். அங்ஙனமன்றி, ஆங்கிலத்திலோ, லத்தீனிலோ அல்லது வேறு மேல்நாட்டு மொழிகளிலோ காணப்படும் ஒரு விஞ்ஞானச் சொல்லைச், சமஸ்கிருதச் சொல்லாக்கியோ அல்லது இந்திச் சொல்லாக்கியோ அதனைத்தமிழ் மொழியில் பிணைப்பதையும், அதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறுவதையும் ஒருபோது ஒப்புக்கொள்ள முடியாது.

இப்போது சமஸ்கிருதத்தைத் தமிழுடன் கலக்கவிட்டதால்தானே தனித் தமிழ்ச் சொற்களாய தண்ணீர்-ஜலமாகவும்; திருவிழா—உற்சவமாகவும்; சுவை—ருஸியாகவும்; துன்பம் — கஷ்டமாகவும்; மகிழ்ச்சி — சந்தோஷமாகவும் இன்னும் இவைபோன்ற எண்ணற்ற இனிய—எளிய தமிழ்ச் சொற்கள் எல்லாம் வடிவமாறி, வழக்கழிந்து நிற்கின்றன. இந்த நிலையில், இனி இந்தியும்தமிழுடன் கலந்துவிட்டால், யானை—ஹாத்தியாகி; குதிரை—கோடா ஆகி; பூனை—பில்லியாகி; வாள்—தல்வார் ஆகி; நல்லது—அச்சா வாகி; நினைவு—யாத் ஆகி; வீடு—கர் ஆகித் தமிழ் மொழியின் தனித்தியங்கும் வாய்ப்பும், வளமும், கலையும் அழிக்கப்படும் என்றும், எனவே எந்த வடிவத்தில்—எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தி இங்கு புகுத்தப்பட்டாலும் அதனைத் தமிழ் மக்கள் கட்டாயம் எதிர்ப்பதென்ற முடிவுக்கு வந்து, அறப்போர்ப் பணியில் இறங்கிவிட்டனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

✲

ஆறுதல் கூறுகின்றோம்.

காஞ்சிபுரம் திராவிடர் கழகச் செயலாளரும், தமிழர் சிற்றுண்டி உணவு நிலைய உரிமையாளருமான தோழர் C. V. M. அண்ணாமலை அவர்களின் துணைவி திரிசடை அம்மையார் 27—7—48 இரவு இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம். தோழர் அண்ணாமலை அவர்கள் திரிசடை அம்மையை வாழ்க்கைத் துணைவியாக ஏற்று இரண்டாண்டுகள் கூட ஆகவில்லை. எதிர்பாராத இந்த மறைவு அவரை அறிந்த அனைவரையுமே கவலைக்குள்ளாக்கிற்றென்றால், தோழர் அண்ணாமலை அவர்களின் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமோ!

கல்வியறிவும் கழகக் கொள்கைகளும் ஒருங்கே அமையப் பெற்ற திரிசடை அம்மை அண்ணாமலை அவர்களின் வாழ்க்கைத் துணைவியாக அமைந்தது ஒரு பெறற்கரிய பேறாகும். இந்தப் பேற்றின் முழுப் பயனையும் நுகர்ந்து இன்புறும் வாய்ப்பை அண்மையில் நடைபெற விருக்கும் இந்தி எதிர்ப்புப் போர் உண்டாக்கி விட்டதென்ற களிப்புடன், சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்கு இருவருமே போய்வந்தனர். அரசாங்க விருந்தினியாகப் போக ஆர்வத்தோடு இருந்த திரிசடை அம்மையை, இயற்கை, தன் நிரந்தர விருந்தாளியாக்கிக் கொண்டதே என்பதை எண்ணும்போது துக்கமும் கவலையும் எம்மைச் சூழ்ந்து கொள்கிறது. துணைவியை இழந்து துன்பக்கடலில் ஆழ்ந்திருக்கும் தோழர் அண்ணாமலை அவர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபம்நிறைந்த ஆறுதல் கூறுகின்றோம்.

ஜெயிலில் இடம் இல்லையாம்

எல்லா ஜெயில்களிலும், கைதிகள் ஏராளமாக உள்ளனர். இட நெருக்கடி அதிகம்.

மதுவிலக்குச் சட்டத்தை மீறியதற்காகத் தண்டிக்கப்பட்டவர்களின்தொகை அதிகமாக இருப்பதால், இந்த இட நெருக்கடி ஏற்பட்டுவிட்டது.

இந்தக் கஷ்டத்தைப் போக்க, சில புதிய ஜெயில்களைக் கட்டவேண்டும் என்று, ஜெயில் சென்றவர்கள் சம்பந்தமாக அக்கறை காட்டும் சங்கத்தின் தலைவர், கோபதி நாராயணசாமி செட்டியார் சர்க்காருக்கு யோசனை கூறியிருக்கிறார்.

புதிய ஆட்சி ஏற்பட்டதற்கு அடையாளமாகப் புதிய ஜெயிலாவது கட்டாவிட்டால் நன்றாக இராது என்று இந்த யோசனையைக் கூறுகிறார் போலும்!

மதுவிலக்கு

—✲—

மதுவிலக்குச்சட்டம், எந்த அளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறது என்பது பற்றி, வெளியே எடுத்துக்கூற, காங்கிரசாருக்கே வெட்கமாக இருக்கிறது.

மதுவிலக்கு அமுலிலிருக்கும் இடங்களில் பழைய குடிகாரர்கள், எப்போதும் 'தாகசாந்தி' செய்து கொண்டுதான் வருகிறார்கள் என்பதை, பொதுமக்கள் கண்டு, சட்டம் இந்த அளவுக்குப் பயனற்றுப் போய்விட்டதே என்றுகேலியாகவே பேசிக்கொள்கின்றனர்.

கடை கிடையாது! ஆனால் குடிவகை உண்டு, எப்போதும்போல!!— என்ற பேச்சு, சகஜமாகிவிட்டது.

மதுவிலக்குச்சட்டத்தை மீறி, குடித்தவர்கள், குடிவகை விற்றவர்கள், திருட்டுச்சாராயம் காய்ச்சினவர்கள் ஆகியோரின் தொகை அதிகரித்த வண்ணமிருக்கிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சுவதும் விற்பதும், இலாபகரமான குடிசைத் தொழிலாகிவிட்டது.

இந்தநிலையைக்கண்டு, முதலமைச்சர் மிக மனவேதனை அடைந்து, பலமுறை பேசிவிட்டார்.

அதிகாரிகளிலேயே பலர், 'தாகம்' அதிகம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று ஜாடையாகப் பேசியிருக்கிறார். மதுவிலக்குச் சட்டத்தை மீறும், வட்டாரங்களுக்குக் கூட்டு அபராதம் விதிக்கும்யோசனை இருப்பதாகக் கூறுகிறார்.

இது, மிக மோசமான முறை என்று 'மித்திரன்' கூறிக்கண்டிக்கிறது. யாரோ சில குடிக்காரர்கள், சட்டத்தை மீறுவதற்காக, குடியை வெறுக்கும் ஏராளமான பொதுமக்கள், தண்ட அபராதம் கட்டுவது, எந்த வகையான நியாயம் என்று, பலரும் கேட்கிறார்கள். இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால்தான், மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமானதாகச் செய்ய முடியும் என்று முதலமைச்சர் எண்ணுகிறார்.

இவ்விதம், 'கெடுபிடி' செய்வது பலன் தராது, என்று 'இந்து' எச்சரிக்கிறது. அமெரிக்காவில், முன்பு மதுவிலக்குச்சட்டம் அமுலிலிருந்த போது, கள்ள வியாபாரம், வலுத்தது — சட்டத்தை மீறச் சாகசத் திட்டங்கள், ஆயிரம் கண்டுபிடிக்கப்பட்டன. சர்க்கார் சீறி, கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டது. ஆனால் நாளாகவாக, மதுவிலக்குச் சட்டத்தை மறைமுகமாக மீறியவர்கள், பகிரங்கமாகவும், துணிவாகவும் மீறலாயினர்.

சர்க்காரின் மதுவிலக்குச் சட்டத்தை மீறி நடப்பது, வீரச்செயலாகக் கூறவும்பட்டது.

சர்க்கார், சட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்த முடியாததை உணர்ந்துகொண்டு, கடைசியில், மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்துவிட்டது. 'இந்து' இதழ், இதனை, ஆட்சியாளர்களுக்கு, ஓர் தலையங்கமூலம் கவனபடுத்துவதுடன், கடுமையான நடவடிக்கை பலன் தராது என்று எச்சரித்துவிட்டு, குடியினால் வரும் கேடுகளைப் பற்றித் தீவிரமான பிரசாரம் செய்யவேண்டுமென்று யோசனை கூறுகிறது.

மதுவிலக்குச்சட்டத்தின் பலனாக மாகாண சர்க்காருக்குப் பெரும் பொருள், வருவாய், குறைந்தது தவிர, உருப்படியான முறையிலே, பலன் வேறேதும் காணோம், என்று காங்கிரசாரே விசாரத்துடன் கூறிக்கொள்கின்றனர். இதே நிலை நீடித்திருக்குமானால், அமெரிக்காவில நடைபெற்றது போல, இங்கும் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்துவிடக்கூடும், என்று வேதனையுடன் பேசிக்கொள்கிறார்கள். மதுக்கடை வைத்துப் பெரும் பொருள் திரட்டிருசிகண்டவர்களோ, தைரியமாகவும், நம்பிக்கையுடனும், பேசவேசெய்கிறார்கள், பார்! பார்! 1950-க்குள் மீண்டும் கடைகளைத் திறக்கப் போகிறார்கள்!!—என்று.

ஏன், மதுவிலக்கு வெற்றிபெறவில்லை—எப்படிச் செய்தால் வெற்றி பெறும், இந்தத்திட்டம் வெற்றிபெற, பொதுமக்கள் என்ன செய்ய வேண்டும், பொதுநலத்தொண்டில் அக்கரை கொண்டவர்கள் இது சம்பந்தமாக என்ன செய்ய வேண்டும், என்பது பற்றி. சர்க்கார், ஒளிவு மறைவு இன்றிப் பலருடன் கலந்து பேசவேண்டும்.

இதை ஓர் கட்சியின் கீர்த்திக்கான திட்டம் என்ற அளவில் கருதிவிடாமல், நாட்டுக்குத் தேவையான திட்டம், எனவே, இதனை வெற்றிகரமாக அமுல் நடத்தும் பொறுப்பு, எந்தக் கட்சியினருக்கும் உள்ளது தான் என்றஉண்மையை உணர்ந்து, மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றியும், அதன் விளைவுகள், அது எந்த அளவுக்கு வெற்றி தந்திருக்கிறது என்பதைப் பற்றியும், கலந்துபேச, எல்லாக் கட்சியினரும் கொண்ட ஓர் தனி மாநாடு கூட்டி, முதலமைச்சர், மதுவிலக்குச் சட்டம் வெற்றி பெற ஓர் வழிகாண வேண்டும்.

சட்டம் செய்துவிட்டோம், அது வெற்றி பெற்றால் என்ன, வெற்றி பெறாவிட்டால் என்ன என்று எண்ணுவது, பொறுப்பற்றபோக்கு.

சட்டத்தை அமுல் நடத்த மேலும் கடுமையான நடவடிக்கைகளைக் கையாள்வோம் என்று கூறுவதும், பலன்தரும் செயலாகாது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதாலும் விற்பதாலும் கிடைக்கும் இலாபம், வேறு எந்தத் தொழிலிலும், சுலபத்திலே கிடைப்பதில்லை, என்று பேசுகிறார்கள். இந்த இலாபருசி வளர்ந்துவிட்டால, சர்க்கார் விதிக்கும் கடுமையான நடவடிக்கைகளையும் பொருட்படுத்தாமல், இதனைத் தொழிலாக்கிக் கொள்வதற்குக் கிளம்புவோரின் தொகை வளரும்.

இதனால், மதுவிலக்குச் சட்டத்தை ரத்துசெய்துவிட்டு, பழையபடி கடைகளைத் திறந்துவிடவேண்டும், என்பது அல்ல, நாம் கூறும் யோசனை. அது, கேவலம்.

ஆனால், அதற்காக, மதுவிலக்குச் சட்டம், வெற்றிகரமாக நடப்பதாக ஊருக்கு வறட்டு ஜம்பம் அடித்துக்கொண்டு, உண்மை நிலைமையை மூடிவைப்பது அழகுமல்ல, பலனும் தருவதுமாகாது. சர்க்கார், வெட்கப்படாமல், கூறிவிடவேண்டும் மதுவிலக்குச் சட்டம், எதிர்பார்த்த விதமான வெற்றியைத் தரவில்லை என்பதைக் கூறிவிட்டு, இதுசம்பந்தமாக அக்கரை காட்டும் அனைவரையும் அவர்கள் எந்தக் கட்சியினரானாலும் சரி, கூட்டி, கலந்து பேசி, வெற்றிக்கான புதிய திட்டம் ஒன்றும் தீட்டவேண்டும். — சர்க்கார் இதுபோலச் செய்ய முன்வருமா?

✲

இலட்சணம் இதுதானு!

•••○●○•••

நாங்கள் நடத்துவது நல்லாட்சி—மக்களின் நலனுக்கு உகந்த ஆட்சி, என்று மார்தட்டிப் பேசிக் கொள்வதிலே மட்டும் காங்கிரஸ் தலைவர்கள், அசகாய சூரர்கள். ஆட்சியிலே உள்ள குற்றங் குறைகளை எடுத்துக் கூற, நமது கழகத்தினரோ, வேறு யாரேனுமோ, துணிந்தால், உடனே தூற்றவும், தண்டிக்கவும் கிளம்புகிறார்கள். எங்களைவிட மக்கள்பால் அன்பு கொண்டவர்களும் இந்த நாட்டிலே இருக்கிறார்களா—எங்களுக்குத் தெரியாதா, எதை எதை எப்படி எப்படி நடத்துவது என்று, எங்கள் ஆட்சியைக் குறை கூற இங்கு யாருக்கு, என்ன யோக்யதை, உரிமை இருக்கிறது என்று, வீராப்புப் பேசுவதிலே மட்டும் குறைவு இல்லை.

ஆனால், ஆட்சியின் இலட்சணம் உண்மையில் எப்படி இருக்கிறது?

தஞ்சாவூர் வட்டாரத்திலிருந்து ஒவ்வொரு வாரமும், 2000 மூட்டை அரிசி, சிலோனுக்குக் கள்ளத்தனமாகக் கொண்டு போகப்படுகிறது. இந்தக் கள்ள வியாபாரத்தை நிறுத்த எத்தகைய கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டாலும் பலன் இல்லை—இந்த வியாபாரத்துக்கு மூல புருஷர்கள் யார்என்று கண்டறிந்து, அவர்களைத் தண்டித்தாலொழிய, கள்ள வியாபாரத்தை நிறுத்த முடியாது.

கள்ள வியாபாரம் நடத்துவதைக் கண்டு பிடித்துத் தடுப்பதற்காகச் சர்க்காரிடம் உள்ளபடகுகளை விட, வேகமாகச் செல்லக்கூடிய, வசதியான படகு வகைகளை, கள்ள வியாபாரக்காரர்கள் வைத்துக் கொண்டுள்ளனர்.

இந்தக்குற்றச்சாட்டைப் பகிரங்கமாகச் சட்ட சபையில், மந்திரிமார்களின் காதிலேவிழும்படி, சட்டசபை அங்கத்தினர், மதுரை வைத்யநாத ஐயர் சென்ற கிழமை கூறினர்.

இங்கே, அரிசி, படி ஒரு ரூபா பத்தணாவுக்குக் கிடைப்பதும் கஷ்டமாகிவிட்டது. இந்நிலையில், களஞ்சியம் என்று கருதப்படும் தஞ்சை மாவட்டத்திலேயிருந்து வாரந்தோறும், 2000 மூட்டை அரிசி சிலோனுக்குக் கள்ள மார்க்கட்டுக்குப் போகிறது.

வழிப்போக்கன் கூறுவது அல்ல, வம்புக்காக எதிர்க்கட்சியினர் கூறுவது அல்ல, வெறும் வதந்தியுமல்ல—சட்டசபையில், பேசுகிறார் இதனை.

ஏன், சர்க்கார், இந்தக் கள்ள வியாபாரத்தைக் கருவறுக்க முடியவில்லை.

தஞ்சைமாவட்டத்திலே இது நடைபெறுவதாக மதுரை ஐயர் கூறுகிறாரே, தஞ்சாவூர்ப் பகுதியிலே இருந்து, பொது மக்களின் பிரதிநிதியாகச் சட்டசபை சென்றுள்ள தலைவர்கள், தூங்கிக்கொண்டிருக்கிறார்களா! இந்தக் கள்ள வேட்டையைக் கண்டறிய வேண்டியதும், ஒடுக்க வேண்டியதும், அவர்களின் கடமை அல்லவா.

உழவன் எங்காவது உரத்த குரலிலே பேசிவிட்டால், ஓடோடிச் சென்று, மந்திரிகளிடம் முறையிட்டு மலபார் போலீசை அழைத்துக் கொண்டு வரும், வீர சர்தார்கள், வாரா வாரம் கொள்ளை இலபத்துக்காகச் சிலோன் கள்ள மார்க்கட்டுக்கு 2000 மூட்டை அரிசி போவதைத் தடுக்க, இதுவரை என்ன செய்தார்கள்? சர்தார், இது சகஜம் என்றுகூறுகிறாரா? அல்லது மதுரை ஐயர் சொல்வது புளுகு என்று எண்ணுகிறாரா?

பொறுப்புணர்ச்சியும், பொது மக்களின் நலனில் அக்கரையும் உள்ளவரானல், சர்தார், என்ன செய்திருக்க வேண்டும்—அவருடைய வட்டாரத்திலே, இப்படிக் கள்ள மார்க்கட் கொழுத்துவிட்டிருப்பதைஒழிக்காதிருப்பது, சரியா, முறையா, ஆண்மையான செயலாகுமா?

என்னிடப் பத்து இலட்சம் பேர் இருக்கிறார்கள், இந்தியைப் பரப்ப என்று பேசுகிறாரே, அதிலே ஒரு கால் இலட்சத்தை இந்தக் காரியத்தைக் கவனிக்கும்படி ஏன் கட்டளையிடக் கூடாது! செய்யலாம்! ஆனால், கள்ள மார்க்கட் நடத்துபவர்கள் கண்டுபிடிக்கப் பட்டால், கண்ணுனியான காட்சியாகவன்றோ இருக்கும், எல்லாம் நமது நண்பர்களாக—கதருடையினராக—பிரபல காங்கிரஸ்வாதிகளாகச் சிக்கிக் கொள்ளக் கூடுமே, என்று ஒரு சமயம் அஞ்சுகிறார் போலும்.

திட்ட வட்டமாய், வாராவாரம் 2000 மூட்டைசிலோனுக்குப் போகிறது என்று சட்டசபையில் கூறிய மதுரை வைத்யநாத ஐயரும், இது சம்பந்தமாக அவருக்குத் தகவல் எப்படிக் கிடைத்தது, என்னென்ன ஆதாரங்கள் உள்ளன, இந்தக் கள்ள வியாபாரம் செய்யும் காதகர்கள் யார், என்பதை, மக்களுக்கும் சர்க்காருக்கும், மேலும் வெளிப்படையாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறார். ஏனோதானோ என்று பேசிவிடுவது கூடாது. அவர் ஒரு வக்கீல்—சட்டம் அறிந்தவர்—எனவே, சகல தகவல்களையும் சர்க்காருக்குச் சமர்ப்பிக்க முன் வர வேண்டும்—குற்றம் நடப்பது தெரிந்தும், குற்றம் புரிபவர்கள் யார் என்பது தெரிந்தும், மூடிவைப்பது, மறைப்பது, சட்டப்படி குற்றமாகும் என்பதைச் சட்டமறிந்த அவருக்கு நாம் எடுத்துக் கூற வேண்டியதில்லை. சட்டப்படி பார்த்தாலும் சரி, சாதாரண நியாயத்தின் படி பார்த்தாலும், இவ்விதமான பொதுஜன விரோதிகளை அம்பலத்துக்கிழுத்து, தக்க தண்டனை பெறச் செய்வதுதான் முறை. செய்தாரா? செய்வாரா? தகவல்கள்—ஆதாரங்கள்—உண்டா? ஏன் தரவில்லை! எப்போது தருவார்? தரும்படி சர்க்கார் கேட்டதுண்டா? இனியேனும் கேட்குமா? ஏழையின் உணவைத் தட்டிப் பறிக்கும் கள்ளமார்க்கட் கழுகுகளைக் கூட அடக்க முடியாத சர்க்காரா இது! இந்த இலட்சணத்திலேயா ஆட்சி இருப்பது?

இந்த அழகில், சிலோனில், இங்கிருந்து போய்க் கொலுவீற்றிருக்கிறார், கிரி அவர்கள். அவர் கண்டுபிடிக்கலாமல்லவா, சிலோனில், வாரா வாரம் 2000 மூட்டைகள், எப்படி வந்து சேருகின்றன, பார்வையிடுகிறார்கள், என்பதை.

அவரும் வேறு ஏதேதோ அலுவல்களில் ஈடுபட்டிருக்கிறார், இங்கேயும், ஆட்சியாளர்கள வேறு பல காரியங்களிலே கவனஞ் செலுத்துகிறார்கள். வாராவாரம், 2000 மூட்டைகள் மட்டும், சிலோனுக்குத் தவறாமல் போகின்றன! எப்படி இருக்கிறது இலட்சணம்!!

●

பண்டிதரின் பேருரை

7-ம் பக்கத் தொடர்ச்சி

அதிக காலம் — கடைசிவரை அல்ல.

தாம் சரியென்றும், தேவையென்றும், நாட்டுக்கு நலன் தருவதென்றும், கருதுகிற சில கொள்கைகளுக்காகப், பணியாற்றக் கிளம்புவோர், முடிசூடா மன்னர்களாக, புகழேணியின் உச்சிப்படியில் ஏறி நிற்பவர்களாக, உள்ளவர்களின் செல்வாக்குக்கு எதிராக, தமதுகொள்கையை வலியுறுத்துவதும், நிலை நிறுத்துவதும், மிக மிகக்கஷ்டமான காரியம் மட்டுமல்ல, ஆபத்தான வேலை என்றும், அறிவர். திரட்டி உருட்டி வைக்கப்பட்டுள்ள அந்தச் செல்வாக்கினால், தாக்கப்பட்டால், தாங்கள் தகர்ந்துபோய்விடக்கூடும் என்பதையும் அறிவர்.

வெற்றி எளிதல்ல, வேதனை அதிகம் என்பதை அறிவர்.

பொதுமக்கள், தமது பேச்சைக் கேட்க, ஏற்க, தயாரில் இல்லை, அவர்களின் நோக்கமும் பாசமும் முடிசூடா மன்னர்களிடம் இலயித்திருக்கிறது என்பதும் தெரியும்.

அடமுட்டாளே! உன்னாலே முடிகிறகாரியமா!

பைத்யக்காரா! ஏன் இந்த விஷவிளையாட்டு.

அசடே! உன்னை யார், சட்டை செய்வார்கள் — என்று பேசுவோர் ஏராளம், என்பதையும் அறிவர்.

பழுக்கக்காய்ச்சப்பட்டிருக்கும் இரும்பின்மீது, எவ்வளவு குளிர்ந்த தண்ணீராக இருப்பினும் தெளித்துப்பயனென்ன, சட சடெனச் சத்தம்கேட்கும், நீர், ஆவியாகி, நில்லாதுபோகும் என்பதை அறிவர்.

அறிந்தும், 'சிலர்' அந்த ஆபத்தான விளையாட்டிலே ஈடுபடுவது, தங்கள் காரியம் உடனடியாக வெற்றியாகிவிடும், கஷ்ட நஷ்டமின்றி வெற்றி கிடைத்துவிடும், என்ற ஏமாளிக்கருத்தினால், அல்ல—நாம், 'முதற்பணி' புரிகிறோம்—முறியடிக்கப்படக்கூடும். ஆனால், நம்மைமுறியடிக்கும் முயற்சியே, முடிசூடா மன்னர்களின் மூலபலத்தைக் குலைத்துவிடுவதுடன், நமது பின்வரிசைகளின் தாக்குதலைத் தாங்கும் வல்லமை போதுமான அளவுக்கு முடிசூடா மன்னர்களுக்கு இல்லை என்பதை நாடறியச் செய்துவிடும் — நாம் பலியாவோம், அந்தச் சேகரித்து வைக்கப்பட்டுள்ள செல்வாக்கின் சீற்றமிகுந்த தாக்குதலுக்கு — அந்தப்பலியை ஏற்றுக்கொண்டு, முதலில் பூரிப்படைபினும், அந்தப் பலியின் காரணமாகவே, பலத்தை இழப்பர், செல்வாக்கினர்.

இந்த 'முடிவுடன்'தான், பணியாற்றமுடியுமே தவிர, மக்களின் தலைவர்களாகி, பொதுஜனஆதரவை அமோகமாகப்பெற்று, அவர்களால் ஆராதிக்கப்பட்டுவரும் சிலருக்கும், அவர்களின் கட்சிக்கும் உள்ள பலத்தைக்குறைத்துமதிப்பிட்டோ, அந்தப் பலத்தை நாம் மிகஎளிதிலே உடைத்துவிடமுடியும், என்ற அசட்டுத்தனத்துடனோ, அல்ல, காரிய மாற்றக் கிளம்புவது.

நாம் சந்தேகிக்கப்படுவோம், ஏளனத்துக்கும் கண்டனத்துக்கும் ஆளாக்கப்படுவோம், பலிபீடத்துக்கு இழுத்துச் செல்லப்படுவோம், என்பதை அறிந்து, நம்மை இவ்விதமாக வெலலாம செய்ய ஆற்றல் படைத்துள்ளவர்களின், ஆற்றல் நம்மை அழிப்பதனாலேயே, அழிந்துபடும், அழிந்துபடுவதால், நாம் துவக்கிவைத்துவிட்டுப்போகும் தூயபணியைத் தொடர்ந்து நடத்தவருவோருக்கு, காரியம் சுலபமாகமுடியும், வெற்றிகிட்டும், என்ற நம்பிக்கையுடன்தான், பணியாற்ற முடியும்.

இன்று, காங்கிரஸ்தலைவர்களுக்கு உள்ள செல்வாக்கு, எத்தகைய எதிர்க்கட்சியையும், ஏளனத்தாலேயே, அழித்துவிடக்கூடிய, அளவுள்ளது. மக்கள், காங்கிரசிடம், எதிர்பார்ப்பது, அதிகம் — நம்பிக்கைக்கு ஓரோர் இடத்தில அசைவு ஏற்பட்டுவிட்டது என்றபோதிலும், அவர்களை ஆராதிக்கும் பக்தர்களாகவும், காணிக்கை தரும் சீடர்களாகவும், புகழ் பாடும் கவிவாணர்களாகவுந்தான மக்களில் பெரும்பாலோர் உள்ளனர். அதிலும் ஆளும் வாய்ப்புப் பெற்றிருப்பதால், இந்த ஆராதனையினரின் தொகை அதிகமாகிறது. அதிகமாகிறதுமட்டுமல்ல, 'ரகம்' பலவிதமானதாகிறது.

அழகப்பா, தங்கத்தாம்பாளத்தில் பூஜைச்சாமான்களை எடுத்துக்கொண்டு போகிறார் ஆராதிக்க— பித்தாபுரத்து இளையராஜா, பின்னால் வருகிறார், திருவிதாங்கூரில் டயாகத்தெரிந்தவர் விருந்தளிக்கிறார், வல்லூறுகள் கிளியெனக் கொஞ்சுகின்றன—ஓநாய்கள் குச்சு நாய்க்குட்டிகள் போல் குலவுகின்றன—அலங்காரப் பதுமைகள் அடப்பந் தாங்குகின்றன— ஆராதனைக்குக் கூடுபவர்களிலே, இப்படிப்பட்ட 'ரகங்களே' இப்போது 'முன்வரிசையிலே' உள்ளன!

ஆராதனையிலே, எந்த அளவு உள்ளன்பு இருக்கமுடியும் என்பதை இந்த ரகங்கள் முன்வரிசையிலே இருப்பதிலிருந்தே ஓரளவுக்குத் தெரிந்துகொள்ளலாம்.

ஆராதனை, ஜனநாயக காலத்தில், ஓர் ஆபத்தான முறை.

நாம் கூறினால் கட்சி மாச்சரியத்தால் கூறுகிறோம்—என்று எண்ணிவிடக்கூடும். இது, ஆராதனைக்குரியவராக இருந்த பேரறிஞரின் உரை. அவருடைய பேருரையிலே, விசேஷமானது, இது. ஆனால் மக்களின் மனதிலே இது பதிந்ததா என்று யோசித்தால், துவக்கத்திலே நான் குறிப்பிட்ட சம்பவம்தான், மீண்டும் கவனத்துக்கு வருகிறது. பலர் இதனைக் கவனித்திருக்கமாட்டார்கள். பல்வேறு நாட்டு வரலாறுகளையும் மக்களின மனப்பண்பையும் மிகநன்றாக அறிந்திருக்கும் காரணத்தாலேதான், பண்டிதர் இந்த உயர்தரமான உண்மையை உரைத்தார். அவருக்கு நமது நன்றி.

❋

தாயகம்

சுதந்திர இந்தியாவில், ஓரியர்களுக்கு ஓர் தாயகம் அமையவேண்டுமென்றும், அதற்காகச் சேரெய்க்கேல்லா, காரஸ்வான் பகுதிகள், ஒரிசாவுடன் இணைக்கப்படவேண்டுமென்றும், அதற்கான சட்டபூர்வமான சகல நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் ஒரிசாவில், ஓர் சர்வகட்சி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

ஒரிசாவுடன், சேர்க்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்படும், அந்தஇருபிரதேசங்களும்இப்போது பீகார் மாகாணத்துடன் சேர்க்கப்பட்டுவிட்டிருக்கின்றன.

அந்த இருஇடங்களிலும் உள்ள மக்கள், ஓரியாமக்கள் என்றும், அவர்களை பீகாரிகளுக்கு அடிமைப்படவிடக்கூடாது என்பதும், ஓரியா மக்களின் தீர்மானக்கருத்து.

ஆசிரியருக்குக் கடிதம்

கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல் வீசுகிறார்

தமிழ்நாடு இந்திப்பிரசார சபைத் தலைவர் தோழர் வேதரத்னம் அவர்கள், இந்தி எதிர்ப்பை மறுக்கும் முறையில் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இந்தியை எதிர்ப்பவர்கள், அதனை, ஏன், என்னென்ன காரணங்களுக்காக எதிர்க்கின்றனர் என்பதை நிதானமாகவும், பொறுமையாகவும் ஆராயாமலேயே அந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். இந்திப்பிரசார சபைக்கே தலைவராய் இருக்கும் ஒருவர், இந்தி எதிர்ப்பைக் கண்டும் வாளா இருப்பது முறையா என்று எவரேனும் கேட்டுவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணமே அவருக்கு இந்த அறிக்கையை வெளியிடும்படி தூண்டிவிட்டதென்று நினைக்கிறேன்.

நாட்டுக்கு ஒரு பொதுமொழி வேண்டும் — அதற்கு இந்தியே பொருத்தமுடையது — அதனை நாடெங்கும் பரப்புவதற்கு இந்திப் பிரசார சபைகளை ஏற்படுத்தி, அவைகளின் வாயிலாக மக்களுக்கு இந்தி கற்றுக்கொடுப்பது—என்ற காங்கிரசின் திட்டத்தின்படி, நாட்டில், இந்திப் பிரசாரம் நெடுநாட்களாகவே நடைபெற்றுவரும்போது, அரசாங்கம், தனக்கிருக்கிற தொல்லைகள் போதாதென்று புதிதாக ஒரு தொல்லையை ஏன் உண்டாக்கிக் கொள்ள வேண்டுமென்பதைக் கூடத் தோழர் வேதரத்னம் அவர்கள் எண்ணிப் பார்க்க முடியாத நிலையில் இருந்துகொண்டு, இந்தி எதிர்ப்பாளர்களிடத்தில் தவறு கண்டுபிடிப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

தோழர் வேதரத்னம் அவர்களே தம்முடைய அறிக்கையில் கூறுகிறார், இந்தி ஒன்றுதான் இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி என்று. இது எவ்வளவு உண்மையென்பது ஒருபுறம் இருக்கட்டும். அவர் கூறுகின்றபடி இந்திதான் இந்நாட்டு மக்களில் பெரும்பாலார் பேசும்மொழி யென்றால், பெரும்பான்மையோரால் பேசப்படும் ஒருமொழியைச் சிறுபான்மையோராக உள்ள சிலர், அதை ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அவர்களுக்கும், அந்தப் பெரும்பான்மை மக்களால் பேசப்படுவதாகச் சொல்லப்படும் மொழிதானே பொதுமொழியாக அமையும்—அமைய முடியும். அப்படியிருக்க, அதனை ஏன் கட்டாயப்படுத்திக் கற்கும்படி செய்கிறீர்கள்? அதற்குத்தான் நாங்கள் இருக்கிறோமே! இந்திப் பிரசார சபை இருக்கிறதே! என்று, பல மொழிகளை ஆராய்ந்து, அவற்றுள் இந்தி ஒன்றுதான் இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையோரால் பேசப்படுகின்றதென்பதைக் 'கண்டுபிடித்த' தோழர் வேதரத்னம் அவர்கள், கல்வியமைச்சரைக் கேட்டிருக்கலாம், அல்லது அவருக்கு அறிவுரை புகட்டி, அவரை அந்தத் தேவையற்ற முயற்சியில் இறங்காமலும், அதற்காகப் பொதுப்பணத்தைப் பாழாக்காமலும் இருக்கும்படி செய்திருக்கலாம். அதைவிட்டு இந்தி எதிர்ப்பாளர்கள் மீது குறை கண்டுபிடிக்கும் குறுகிய மனப்போக்கை ஏன் கொண்டார் என்பது தெரியவில்லை.

மேலும் அவர் தம்முடைய அறிக்கையில் கூறுகிறார், இந்தியில் இலக்கியச் சிறப்பு எதுவும் இல்லை என்று. இந்தச்சமயத்தில் இந்த உண்மையை அவரே ஒப்புக்கொண்டுவெளியிட்டதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். ஆனால்; பொதுமக்களிடத்தில் ஒரு மொழி கட்டாயமாகப் புகுத்தப்படும்போது, அவர்கள் அந்த மொழியில் இலக்கியச் சிறப்பு இருக்கிறது—இலக்கண அமைப்பு இருக்கிறது என்பதற்காகவோ, அல்லது அந்த மொழியில் அவை இல்லை என்பதற்காகவோ அவர்கள் அதனைக் கற்றுக் கொள்வதில்லை—அந்த மொழிக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்கு, அவர்களுக்கு அதனிடத்து மதிப்புக் கொள்ளும்படி செய்துவிடுகிறது. உதாரணமாக ஆங்கிலத்தை எடுத்துக் கொள்ளலாம். ஆங்கிலம், உலகிலேயே சிறந்த இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு மொழி. அதனுடைய வளம், இலக்கியத் துறையில், பிறமொழி இலக்கியங்களையும் வளரச்செய்யும் சிறப்பினைப் பெற்று மேலும் மேலும் வளர்ச்சி அடைந்துகொண்டே இருக்கிறது. ஆங்கிலத்துக்கு இத்துணைச் சிறப்பு இருக்கிறதென்பதற்காகவா இந்நாட்டு மக்கள் அம்மொழிக்கு மதிப்புக் கொடுத்து அதனைக் கற்றுக் கொண்டனர்? அல்லது ஆங்கிலத்தில், ஒரு ஷேக்ஸ்பீயர், ஒரு பைரன், ஒரு ஷெல்லி இருக்கின்றனர் — அவர்களுடைய இலக்கியங்கள் படித்தின்புறுதற்குரியன என்று எண்ணியா இந்நாட்டு மக்கள் அதற்கு மதிப்புக்கொடுத்தனர்? இல்லவே இல்லை! என்றாலும் இந்நாட்டு மக்கள் அந்த மொழிக்கு மதிபபுக் கொடுத்தனர்—கற்றுக் கொண்டனர். காரணம் என்ன?

ஆங்கிலம், அரசாங்க மொழி—அமைச்சர்கள் பேசும் மொழி—கலெக்டர்பேசுகிறார்—கண்டக்டரும் பேசுகிறார்—ரோட்டில் பேசப்படுகிறது—ஓட்டலில் பேசப்படுகிறது—வீட்டில் பேசப்படுகிறது என்ற செல்வாக்கை அதற்கு உண்டாக்கியதால்தானே அதனை மக்கள் மதிப்புக் கொடுத்துக் கற்றுக்கொண்டனர். ஆங்கிலம் தெரிந்தவர்களில் பலருக்கு இன்றும் கூட ஷேக்ஸ்பீயர் என்றால் என்ன என்றே தெரியாது.

இதுபோலவேதான், இந்திமொழியில் இலக்கியச் சிறப்பு எதுவும் இல்லையென்ற போதிலும்—இலக்கண அமைப்புக் கிடையாது என்ற போதிலும், அந்த மொழி அரசாங்கத்தின் செல்வாக்கைப் பெற்றுவிட்டால் அதனையே மக்கள் விரும்புவர்—மதிப்பர். இதனால் தமிழ் மொழி தன்னிலை கெடும்—தன் செல்வாக்கை இழக்கும்.

தோழர் வேதரத்னம் அவர்களின் கணக்குப்படி, பத்துலட்சம் தொண்டர்களும் அவர்களுடைய தலைவர்களும் சேர்ந்து ஆங்கிலத்தை விரட்டியடிப்பதற்கு எத்தனைக் கஷ்டப்பட்டார்கள்? அவர்கள் இந்தச் செயற்கரிய காரியத்தைச் செய்து வெற்றி பெற்றதற்காக உலகமே அவர்களைப் பாராட்டிற்று. ஆயுதம் தாங்கிய ஆங்கிலேயர்களை ஆயுதம் இல்லாமலேயே விரட்டியடித்தார்கள். இதனைச் சாதாரண காரியம் என்று எந்த அறிவுகெட்டவனும் கூறமாட்டான்.

ஆனால், இப்படிப்பட்டவர்கள் இன்று என்ன செய்கிறார்கள்? ஆங்கிலத்தை விரட்டியடித்து விட்டோம். இப்போது அந்த இடத்துக்கு இந்தியைக் கொண்டுவந்து விட்டோம் என்று எக்களிப்புடன் கூறுகிறார்கள். பெற்ற சுதந்திரம் உங்களுக்கல்ல, எங்களுக்குத்தான் என்று தமிழ் மக்களை நோக்கிக் கூறுகிறார்கள். தமிழுக்கல்ல, இந்திக்குத்தான் என்று தமிழை நோக்கிக் கூறுகிறார்கள். தமிழில் இலக்கியம் இருந்தால் என்ன? இலக்கணம் இருந்தால் என்ன? கலைப்பொலிவு இருந்தால் என்ன? அதற்கில்லை செல்வாக்கு! இந்தியில் இலக்கியமில்லை — இலக்கணம் இல்லை; என்றாலும் அதற்கே செல்வாக்கு—அதிகார பூர்வமான செல்வாக்கென்று ஆளவந்தவர்கள் ஆளவைத்தவர்களை நோக்கிக் கூறுகிறார்கள். இது முறையா—தகுமா என்று கேட்டால், இந்தியால் தமிழுக்கு ஆபத்தில்லை—ஆபத்தென்று கூறுவது வெறும் புரளி என்று பூச்சாண்டி காட்டுகிறார் தோழர் வேதரத்னம் அவர்கள்.

இந்தியால் தமிழுக்கு ஆபத்தில்லை என்று இன்று கூறப்படுவது போலவேதான் அன்றும் ஆங்கிலத்தால் தமிழுக்கு ஆபத்தில்லை என்று கூறப்பட்டது. ஆங்கிலம் கற்பவர்களும், தங்களுடைய ஆங்கிலக் கல்வி, தமிழுக்கு ஆபத்தை உண்டாக்கும் அல்லது உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடும் அதனைக் கற்கவில்லை. ஆனால், இன்று ஆங்கிலம் கற்ற தமிழ் மக்கள் பேசும் தமிழையும் ஆங்கிலம் கல்லாத தமிழ் மக்கள் பேசும் தமிழையும் ஒப்பு நோக்கிப் பாருங்கள். ஆங்கிலம் கற்றவர்கள் பேசும் தமிழில், அவர்களையும் அறியாமல் எத்தனை ஆங்கிலச் சொற்கள் புகுந்து தமிழைக் கெடுத்து விடுகின்றன! ஆங்கிலம் அரசாங்கத்தின் செல்வாக்கைப் பெற்றிருந்த காரணத்தால், அதனைக் கல்லாதவர்கள்கூட அதற்கு மதிப்புக் கொடுக்கவேண்டுமென்ற அறியாமைமிகுந்த ஆர்வத்தால், அங்கும் இங்குமாகப் பொறுக்கி எடுத்த ஆங்கிலச் சொற்களை வைத்துக்கொண்டு தமிழ் மொழியிற் பேசும்போது, அவற்றை அங்கங்கே தூவித் தமிழின் தூய்மையைக் கெடுத்துவிடுகிறார்கள்!

இந்த நிலையில், இனி இந்தியும் அரசாங்கத்தின் செல்வாக்கைப் பெற்றுவிட்டால் தமிழ் மொழியின் நிலை என்ன ஆகும்? தரணி ஆண்ட தமிழ், தனி ஒருவனால் கூடப் பேச முடியாத நிலையை அடையாதா? இந்தி நுழைவால் தமிழுக்கு ஆபத்து ஏற்படாதா? இந்த உண்மைகளைத், தோழர் வேதரத்னம் அவர்கள் இப்போது அவருக்கு இருக்கும் இந்தி ஆர்வத்தால் ஆர அமர இருந்து ஆராய்ந்து பார்க்க முடியாதுபோனாலும், அவருடைய பின் சந்ததியார், தமிழ் மொழிக்கு இந்தியாலும் பிற மொழிகளாலும் ஏற்பட்ட ஆபத்தை எண்ணி வருந்தாமல் இருக்கமுடியாது.

ஒரு மொழி, பிற மொழிகளின் கலப்பால் கெட்டுவிடும் என்பது, பிற மொழிகளை அம்மொழியோடு கலக்கும்போது தெரியாது. காலப் போக்கில்தான் அதன் உண்மை புலப்படும். உதாரணம் வேண்டுமா? சமஸ்கிருதமும் ஆங்கிலமும் இன்று எந்த அளவில் தமிழ் மொழியில் கலந்து தமிழின் தகைமையைச் சிதைத்துவிட்டன என்பதைச்சிறிது தமிழுணர்வோடு எண்ணிப் பார்த்தால் விளங்கி விடுமே! தமிழ் என்ன மற்ற மொழிகளைப்போல் இரவல் வாங்கிப் பிழைக்கும் மொழியா? இல்லாதவன் இரப்பது இயற்கை. இருப்பவன் இரப்பது இழிவு. இந்தியால் தமிழுக்கு ஆபத்தில்லை என்று கூறும் தோழர் ஏன் இதனை எண்ணிப் பார்க்கக்கூடாது? தமிழில் சோறு இருக்கும்போது சாதத்தை ஏன் இரவல் வாங்க வேண்டும்? தமிழில் சந்தை, அங்காடி இருக்கும்போது மார்க்கட்டை ஏன் இரவல் வாங்கினோம்? இவ்வளவும் போதாதென்று இனிச், சாவல், பஜார் ஆகிய இந்திச் சொற்களையும் தமிழ், இரவல் வாங்கவேண்டுமென்று கூறுவது முறையா என்று கேட்டால், "அப்பா குதிருக்குள் இல்லை" என்ற முறையில் இந்தியால் தமிழுக்கு ஆபத்தில்லை என்று பேசுவது? இவ்வாறு ஒரு தமிழன் பேசலாமா?

தமிழுக்கு ஆபத்தில்லை — அது நல்ல செல்வாக்கோடுதான் திகழ்கிறது என்று தோழர் வேதரத்னம் கூறுகிறார், இதில் ஏதாவது உண்மை யிருக்கிறதா? எங்கே இருக்கிறது அதற்குச் செல்வாக்கு? தமிழ் நாட்டிலுள்ள கோயில்களில் தமிழ் மொழிக்குச் செல்வாக்கிருக்கிறதா? வீடுகளில் நடைபெறும் மணவினை முதலான காரியங்களில் தமிழ் செல்வாக்குப் பெற்றிருக்கிறதா? இதற்கெல்லாம், தோழர் வேதரத்னம் அவர்கள் குறிப்பிடுவதுபோல், இந்நாட்டில், ஒரு தாயோ சேயோ பேச முடியாத சமஸ்கிருதம் அன்றோ பயன்படுத்தப்படுகின்றது. ஏன் இந்த நிலை ஏற்பட்டது?

இந்தி கற்றதால் அன்றோ குமரகுருபரர் இங்கிருந்து காசிக்குப் போய்க் கம்பராமாயணத்தைத் துளசி ராமாயணமாக்கினார் என்று பெருமிதத்தோடு பேசி மகிழும் அன்பர் வேதரத்னம் அவர்கள், வடநாட்டில் இருந்துவந்த சமஸ்கிருதம், தென்னாட்டிலுள்ள கோயில்களில் குடிபுகுந்து, தமிழ் மொழியை அங்கு குடிபுக விடாமல் விரட்டியடித்து விட்டதே! ஏன்? எப்படி? எதனால்? என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டாமா? இது, தமிழுக்கு ஆபத்தில்லையா என்று உணர்ந்து பார்க்கவேண்டாமா?

இனி, இலக்கியச் சிறப்பும், இலக்கண அமைப்பும், கலைச்செல்வமும் நிரம்ப உள்ள தமிழ்மொழி வழங்கும் தமிழ் நாட்டில் இவை எதுவுமற்ற இந்திமொழியைக் கொண்டு வந்து நுழைப்பதை எண்ணும்போது நமக்கு ஒரு புராணக்கதைதான் நினைவுக்கு வருகிறது. அதாவது, நளாயினி என்ற பெண், தன்னுடைய தொழுநோய் பிடித்த கணவனை ஒரு கூடையில் வைத்துச் சுமந்துகொண்டுபோய் இன்னொரு பெண்ணிடம் விட்டாளாம். இந்த முறையிலே தான் இப்போது கல்வியமைச்சரும் தோழர் வேதரத்னம் போன்றாரும் தொழுநோய் பிடித்த (இலக்கிய இலக்கண வளமற்ற) இந்தியை அரசியல் கூடைக்குள் வைத்துச் சுமந்துகொண்டு வந்து தமிழ் மொழியோடு சேர்க்கப் பார்க்கின்றனர். தொழுநோய், தொட்டவரை என்ன செய்யும்? தொட்டவரும் தொழுநோய்க்குள்ளாகத்தானே வேண்டும்! தமிழுக்கு இந்தநிலை ஏற்பட்டால் ஆபத்தில்லையா? அவமானம் இல்லையா? ஏன் இதனை இவர்கள் எண்ணிப்பார்க்கக் கூடாது?

தொழுநோய் பிடித்த கணவனை, அவன் மனைவி இன்னொரு பெண்ணிடம் கொண்டுபோய் விட்டாள் என்ற கதை புராண (ஆரிய) முறைப்படி ஒருவேளை சிறந்த—நாகரிகச் செயலாக இருக்கலாம். ஆனால், ஒரு பெண் தன்னுடைய கணவனை இன்

னொரு பெண்ணிடம் கொண்டு போய் விடுவதும், அந்தக் காரியத்தை அவளே மனமொப்பிச் செய்வதும் தமிழர் முறைப்படி, மனதினுல்கூட எண்ணத்தகாத ஒழுக்கம் கெட்ட காரியமாயிற்றே! கல்லையும் புல்லையும் கணவனாகக்கருதி, அவன் சொல்வதை யெல்லாம், ஒருபெண் தன்னுடைய கண்ணையும் கருத்தையும் மூடிக்கொண்டு பின்பற்றிநடக்க வேண்டுமென்று கூறுவது, தமிழர் பண்பாட்டினை அறியாதார் கூற்றாகும். எனவேதான் நளாயினியின் நாகரிகமற்ற செயல் போன்ற காரியத்தை நாடாள வந்தவர்கள், அதிலும் தமிழர் பண்பாட்டினை உணர்ந்தவர்கள் செய்யக்கூடாது—செய்ய வேண்டாம் என்று கூறுகின்றேன்—புனிதத் தன்மை வாய்ந்த தமிழ் மொழியோடு, தொழுநோய்பிடித்த இந்தியைப் பிணைத்துத் தமிழின் தூய்மைக்கு இழுக்குத் தேடவேண்டாம் என்று கூறுகின்றேன் —இந்தி நுழைவு, தமிழ்மொழிக்கு மட்டுமல்ல; தமிழ்க்கலை, தமிழ் நாகரிகம் ஆகியவற்றுக்கும் கேடுண்டாக்கும் என்று கூறுகின்றேன்— நளாயினி, தனக்குத் தவிர்க்கமுடியாத மானக்கேட்டினை உண்டாக்கியதோடு மட்டும் என்று விடாமல், தொழுநோய் பிடித்த தன்னுடைய கணவனை இன்னொரு பெண்ணிடம் கொண்டுபோய் விட்டு, அவளும் அந்தத் தொழுநோயால் துன்பம் அடையும்படி செய்ததுபோல், செய்ய வேண்டாமென்று இப்போது அந்த 'நளாயினி வேலை'யைச் செய்ய முற்பட்டிருக்கும் தோழர் வேதரத்தினம் அவர்களையும் கல்வி அமைச்சரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இனித், தோழர் வேதரத்னம் அவர்கள், "இந்தியில் இலக்கியம் இல்லை—இலக்கணம் இல்லை— தமிழில் இலக்கியம் இருக்கிறது—இலக்கணம் இருக்கிறது—என்ற போதிலும் இந்தியைத்தான் நாம் அனைவரும் கற்றுக்கொள்ளவேண்டும் —அதற்கே அரசாங்கச் செல்வாக்கு உண்டாக்கவேண்டும்" என்று கூறுகிறார். இது எப்படியிருக்கிறதென்றால், "எனக்கு வாய்த்த மனைவி நல்ல அழகுள்ளவள், ஒழுக்கமுள்ளவள்தான். என்றாலும் அவள்மீது எனக்குக் காதல் இல்லை. அடுத்த தெருவில் ஒருத்தி இருக்கிறாள். அவளுக்குக் கண் இல்லை — மூக்குச் சப்பை—காது கேளாது — பற்கள் முனையளவு நீளம் இருந்தாலும் அவளைத்தான் நான் விரும்புகிறேன் — காதலிக்கிறேன்" என்று கூறுவது போல் இருக்கிறது. இந்தத் துறையில் தோழர் வேதரத்னம் அவர்களின் உள்ளக்கிடக்கைஎப்படியிருந்த போதிலும், அதுபற்றி நான் கவலையோ வியப்போ கொள்ளவில்லை—கொள்வதும் முறையாகாது —அது அவருடைய தனிப்பட்ட பண்பு என்றும் விட்டுவிடலாம். ஆனால், தமிழ்மக்கள் அனைவருமே இந்தப் போக்கினைக் கொள்ள வேண்டுமென்று கூறப்படுவதை யாரும் ஒப்புக்கொள்ளமுடியாது—கூடாது.

எனவேநான், தமிழ் நாட்டைத் தமிழ்தான் ஆளவேண்டும் — இந்திக்கு அந்தச் செல்வாக்கு ஏற்படவிடக்கூடாது என்று கூறுகின்றேன். தமிழ்நாட்டில் தமிழ்தான் அரசியல் செல்வாக்கைப்பெறவேண்டும்—இந்திக்கு அந்தச் செல்வாக்கு அதிலும் அரசியல் அதிகாரபூர்வமான செல்வாக்கு ஏற்பட்டுவிட்டால், நான்மேலே எடுத்துக்காட்டியபடி, தமிழின் செல்வாக்குக் குறையும்—இந்தியால் தமிழுக்கு நிச்சயம் ஆபத்து உண்டாகும் என்று கூறுகின்றேன். பத்தாண்டுகளுக்கு முன் இந்த நிலை தமிழுக்கு ஏற்பட்டு, இருவரின் உயிரைக்குடித்த இந்தி—ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களைச் சிறைக்கு அனுப்பிய இந்தி, மீண்டும் அந்தப் பணியினையே செய்ய முன் வந்திருக்கிறது. "அப்படியா? மீண்டும் இந்தியா? அன்று ஆயிரம் என்றால், இன்று பத்தாயிரம்பேர் தயாராக உள்ளனர் தமிழைக் காக்க" என்பதனை வேதரத்னம் அவர்கள் விளையாட்டாக எண்ணி விம்மிதமடைய வேண்டாம் என்று எச்சரிக்கை செய்கிறேன்.

இனி, நாட்டுக்கு ஒரு பொது மொழிவேண்டுமென்ற குளிரால் அவதிப்படுவோர், வேண்டுமானால் இந்திப்போர்வையால் மூடிக்கொள்ளட்டும். எல்லோரும் அந்தப்போர்வையை போட்டுக்கொள்ள வேண்டுமென்றுகட்டாயப்படுத்தவேண்டாம். இந்திக்கட்டாயமுயற்சிக்குத்தோழர் வேதரத்னம் போன்றார் பரிந்துபேசவும் வேண்டாம். தமிழறிந்த அறிஞர்கள் இந்தியால் தமிழுக்கு ஆபத்து உண்டாகும் என்பதை உணர்ந்து கூறிவிட்டனர். குறைமதியினரன்றி, மற்றை எவரும் இந்த உண்மையை மறுக்க முன்வரமாட்டார்கள். கள் குடிப்பவன், கள் குடிப்பதால் தீமையெதுவும் ஏற்படாது என்று கூறுவதில் எவ்வளவு உண்மையிருக்குமோ, அவ்வளவு உண்மை, இந்திப் பிரசாரச் சபைக்குத் தலைவராய் இருக்கும் ஒருவர், இந்தியால் தமிழுக்கு ஆபத்தில்லை என்று கூறுவதிலும் இருக்கிறது. கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல் எறிவது போல், தோழர் வேதரத்னம் அவர்கள் இந்திப்பிரசாரசபையில்இருந்து கொண்டு இந்தியால் தமிழுக்குஆபத்தில்லை என்று கூறுகிறார். கண்ணாடி வீட்டுக்காரன் காரைவீட்டின்மீது கல் வீசினால், கண்ணாடிவீடு என்ன ஆகும் என்பதைத் தோழர் வேதரதனம் அவர்கள் உணரவேண்டுகிறேன்.

இங்ஙனம்,
ஈழத்து அடிகள்,
முன்னாள் இந்தி எதிர்ப்பு
இரண்டாவது சர்வாதிகாரி.

16-ம் பக்கத் தொடர்ச்சி

அழியாப் புகழ் நிறைந்த நமது தாயகத்திற்கு இன்று உருவமில்லை; வரையில்லை! சரியான சரித்திரமும் கிடையாது. நமது ஆன்றோரின் நாட்டுப் பெருமை, வெற்றிப் பிரதாபம் எல்லாம் அழிந்துமறைந்துபோயின. தனிப்புகழ் கொண்ட நமது கலை, மொழி, நாகரிகம் அனைத்தும் கறைபடிந்து போயின.

அன்று ஆண்ட பரம்பரை இன்று அடிமையாயினர்! கப்பலிலே பொருளேற்றி வியாபாரத்துறையில் உலகம் சுற்றிவந்து வெற்றிவாழ்வு நடத்திய திராவிடமக்கள் இன்று கைவண்டிகளையும், ரிக்ஷா வண்டிகளையும் இழுத்துத்தட்டழியும் பரிதாபகரமான பாட்டாளி மக்களானுர்கள்! பாரோர்புகழ்ந்த பட்டுப்பீதாம்பரங்களும், பலவித நுண்பொருள்களும் செய்து கைத்தொழில் திறமையில் நிகரில்லாப்பெருமைபெற்ற நம் தாய்நாட்டு மக்கள் இன்று கவலையால் காலம் தள்ளுகின்றனர். மானமும், மனையும் காக்க மாற்றார்மேல் சிம்மம் போல் பாய்ந்து சீறிப்போரிட்டு வெற்றிக்கொடி நாட்டிய வீரத்தமிழர் கூட்டம் இன்று பூனைகளுக்கும் பஞ்சாங்கப் படைகளுக்கும் பயந்து பின்வாங்கி அஞ்சலி செய்யும், அவலநிலைமைக்கு ஆளாகிவிட்டார்கள்.

(தொடரும்)

திராவிடஸ்தான்!

[சாத்தூர் சா. இராமசாமி]

சென்றவாரத் தொடர்ச்சி

"திரு இடம்" என்பதுதான் திராவிடமாக மாறிவிட்டது. தமிழர்கள், 'திரு' எனும் சொல்லை ஒரு மேன்மை அணியாக உபயோகிப்பது வழக்கம். வடவர்கள் எப்படி ஸ்ரீ என்னும் சொல்லை ஒவ்வொரு பெயருக்கும் முன்னால் உபயோகிக்கிறார்களோ, அப்படியே தென்னவர்களாகிய நாம் திரு எனும் சொல்லைப் பெயர்களுக்குமுன் பெருமைச் சொல்லாக உபயோகிக்கிறோம். நெல்வேலியைத் திருநெல்வேலி என்றும், ஐயாறைத் திருவையாறு என்றும், குற்றாலமலையைத் திருக்குற்றாலமலையென்றும் சொல்லுகின்றோம். இதுபோலவே தமிழர்கள் வாழ்நிலம் அனைத்தும் திரு இடம் என்று சொல்லப்பட்டுப் பிற்காலத்தில் திராவிடம் என்பதாக மருவிவிட்டது. தமிழ் என்றால் இனிமை என்பது பொருள். எனவே அது நிலவும் இடமனைத்திற்கும் திரு எனும் சிறப்பையளிப்பது இயல்பேயல்லவா?

நான் ஆலோசித்தவரை, திராவிடம் என்பதற்கு இதைத்தவிர வேறு காரணம் இருப்பதாகத்தெரியவில்லை.

நமது தமிழ்ப்புலவர்கள், தமிழாகி திரமிலமாகி திரமிழமாகி திராவிடமாகிவிட்டது என்று சொல்லுவதுமுண்டு. ஒரு வார்த்தை ஐந்தாறு தடவை மாறியிருக்கும் என்பதைவிட நான் மேலே சொல்லியபடி ஒரே மாற்றம்தான் ஆகியிருக்கும் என்பது பொருத்தமல்லவா?

எல்லை என்பது நாட்டைப் பொறுத்து ஏற்பட்டதாகும். ஒவ்வொரு இன மக்களுக்கும் அவர்கள் பேசும் மொழியைப் பொறுத்தும், அவர்கள் வாழும் நாட்டைப் பொறுத்துமே பெயர் ஏற்படுகிறது. சுற்றிலுமுள்ள மலையைப் பொறுத்து 'மலைநாடு' என்ற பெயர் ஏற்படுகிறது. இந்த முறையில் பார்த்தோமானால், திராவிடம்என்பதும் இனிமையையும், மேன்மையையும் குறிக்கப்பட்ட பெயராகும். அதாவது இனிமை என்பது தமிழ் என்பதிலிருந்து இனிமை நிறைந்தது தமிழகம் என்று வழங்கப்பட்டு, பின்மேன்மை அணியுடன் திரு இடம் என்றாகி அது அந்நியர் வாயில் திராவிடம் என்று மாறிவிட்டது என்பதாம்.

அது எப்படி இருந்தாலும் தமிழ்மொழி, தமிழ்மக்கள் என்பவற்றைத் திராவிடமொழி திராவிடமக்கள் என்றே சரித்திராசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆகையால் நாமும் அவர்களைப் பின்பற்றிப் பேசுவது பல விதத்திலும் நலலது என்றே நினைக்கிறேன்.

செந்தமிழ்ச் செல்வர்களே! எந்தச் சரித்திர அறிஞர்களாலும் கண்டு பிடித்துச் சொல்லாத ஒரு அரிய வரலாற்று நுட்பத்தை நமது பெரியார் அவர்களால்தான் விளக்கி வைக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தனித் தமிழனாகிய நான் என்னைத் திராவிடன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமையடைகிறேன். ஒவ்வொரு தமிழனும் தன்னைத் திராவிடன் என்று பதிவு செய்துகொள்ளுவதன் மூலமே அவனது பிறப்புரிமையைக் காப்பவனாகின்றான்.

எந்த ஒரு தமிழன் தன்னைத் திராவிடன் என்று சொல்லிக்கொள்ள விருப்பமில்லையோ, எந்த ஒரு தமிழன் தன்னை இந்து என்று விளம்பரப் படுத்திக்கொண்டிருக்கிறானோ அவன் அறியாமையிருந்தவன் மாத்திரமில்லை; அந்நியருக்கு நம்மைக் காட்டிக் கொடுக்கும் துரோகியுமாவான்.

நம்மிற் சில கற்றறிஞர்கள் கூடத் திராவிடர் என்றால் இழிவு தரும் சொல் 'நாகரிகமற்ற மக்கள்' என்று பொருள் தரும் சொல் என்று கூப்பாடு போட்டு நமது தேசியக் கூட்டுறவையும், சொந்த நாட்டுப் பற்றையும் சீர்குலைக்கப் பார்க்கிறார்கள்.

திராவிடர் என்றால் அதை ஒரு கெட்டசொல் என்றோ, காட்டுமிராண்டித்தனமான பெயர் என்றோ நாம் இது வரை எங்கும் கேள்விப்பட்டதில்லை. எந்தச்சரித்திரக் குறிப்புகளிலுமோ, அகராதிகளிலுமோ அவ்வாறு குறிப்பிடவுமில்லை. அதற்குமாறாகத், திராவிடர்என்றால், ஐம்பெருங் குழுவினர், உலகின்பூர்வ குடிகள் என்றுதான்பொருள் சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் நமது சொந்த இனப் பெயரான திராவிடர், திராவிட மொழி, திராவிடர் கலை என்பவற்றை அடியோடு மறந்துவிட்டு, ஆரியமாயையில் அகப்பட்டு, இந்து, இந்தியன் என்று சொல்லிக் கொள்ள விரும்பியதின் கொடிய விளைவைத்தான் இன்று நாம் அநுபவிக்கிறோம்.

ஒரு தமிழன் அல்லது திராவிடனுக்கு இந்துமதத்தில் கௌரவமான இடம் இல்லை; இந்து மதச் சட்டத்தில் நியாயமான சம நீதியில்லை! இந்தியர் என்ற வரிசையிலும் நாம் கடையராக— கொடிதாங்கிகளாக — கோபுரத்து (காட்சிக்கு)ப் பொம்மைகளாக (அவர்கள்) சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாக—சரண்டப் படுவோராகவே யிருக்கிறோம்.

பன்னூற்றாண்டு காலமாக பரம்பரையாக இந்நாட்டிலே பிறந்து வளர்ந்து வாழ்ந்துவரும் திராவிட மக்கள் எல்லாவகையிலும் அடிமைகளாக இருக்கிறோம்; அந்நிய நாட்டிலிருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்நாட்டிற்கு வந்த ஆரியர்கள் ஆளும் வர்க்கத்தாராக ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

ஐயகோ! இந்த அநியாயத்தை நினைத்தாலும் நெஞ்சம் கலங்கவில்லையா? நமது இனத்தார் படும்பாட்டைப் பார்த்துப் பார்த்து மனம்பதறவில்லையா? திராவிடநாட்டில், திராவிடநாட்டுமக்களின் உரிமை அவர்களது உள்ளம் துடிக்கத் துடிக்கப் பறிமுதலாவதைப் போல் வேறு எந்த நாட்டிலும் கண்டதுண்டா? கேட்டதுண்டா? இனித்தான் காண முடியுமா?

(15-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street Conjeeveram.